பக்கங்கள்: எட்டு

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 பங்குனி 18 திங்கட்கிழமை (31-03-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 124

## ஒகஸ்ட் மாதம் திடீர் தேர்தல்?

### அரச உயர்பீடம் முடிவு

கொழும்பு, மார்ச் 31

எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தில் திடீர் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவது குறித்து அரச உயர்மட்டத்தில் ஆராயப்படுகின்றது.

கொழும்பிலிருந்து வெளியாகும் 'த ஐலண்ட்' பத்திரிகையின் ஞாயிறுப் பதிப்பு இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கின்றது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



அப்ப...... நல்லூர் திருவிழாவோடை தேர்தல் திருவிழாவும் சூடு பிடிக்கும் எண்டு சொல்லுங்கோ......!

## மாகாணசபைகள் உடன் கலைப்பு?

திடீர் பொதுத்தேர்தல் ஒகஸ்டில் நடைபெறலாம் என்ற செய்தி வெளியாகியிருப்பது ஒருபுறமிருக்க —

மறுபுறத்தில் உரிய காலத்துக்கு முன்பதாக ஒகஸ்ட் மாதத்தில் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவது குறித்து அரச உயர்மட்டம் ஆலோசித்து வருவதாக கொழும்புத் தமிழ்ப் பத்திரிகை ஒன்று தெரிவித்திருக்கின்றது.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளை ஆராய்ந்த பின்னர் உயர் மட்டம் இந்த முடிவை எடுத்துள்ளதாக தெரிகின்றது என அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

சூட்டோடு சூடாக மாகாண சபைகளைக் கலைத்து தேர்தல்களை நடத்துவதன் மூலம் ஐ.தே.கவின் கைகளில் உள்ள மாகாண சபைகளையும் கைப்பற்ற முடியும் என அரச வட்டாரங்கள் நம்புகின்றன.

இத்தேர்தல்களை நடத்துவது தொடர்பாக சிரேஷ்ட அமைச்சர்களுடன் ஜனாதிபதி ஆராய்ந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மற்றொரு

## அன்ரனோவ் விபத்தில்!

விமானப் படையினரிடம் எஞ்சியுள்ள ஒரேயொரு அன்ரனோவ் 32 ரக விமானமும் கடந்த வெள்ளிக்கிழமை இரத்மலானை விமான நிலையத்தில் விபத்துக்குள்ளானது; ஆனால் சேதம் எதுவும் இன்றி மயிரிழையில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சில விமானப்படை அதிகாரிகள் முகாம்களுக்குள் தடுத்துவைப்பு

கொழும்பு, மார்ச் 31

தொடர்ந்து விமானப்படை சந்தித்து வரும் இழப்புகளுக்கு விமானப்படைக்குள் இடம்பெறும் 'உள்வீட்டுச் சதி'தான் காரணமா என்பது குறித்து உயர்மட்ட விசாரணைகள் நடைபெற்றுவரும் அதே வேளை —

விமானப்படையைச் சேர்ந்த சில அதிகாரிகள் முகாம்களுக்குள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

விமான சேதங்கள்

## விசாரணைக்கு வெளிநாட்டவர்

விமானப்படை தொடர்ந்து சந்தித்து வரும் விமான இழப்புக்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்த அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த விமான தொழில் நுட்ப நிபுணர் குழு ஒன்று இவ்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## கௌடா தலைமையிலான இந்திய அரசு கவிழும் நிலை!

புதுடில்லி, மார்ச் 31

இந்தியாவில் ஆளும் ஐக்கிய முன்னணி அரசுக்கு வெளியில் இருந்து அளித்து வந்த ஆதரவை இந்தியதேசிய காங்கிரஸ் கட்சி நேற்று திடீரென விலக்கிக் கொண்டதை அடுத்து —

பிரதமர் தேவகௌடா தலைமையிலான பத்து மாதகால சிறுபான்மை அரசு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவை இழந்தது.

இதனால் இந்திய அரசியலில் நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கின்றது.

காங்கிரஸ் கட்சித் தலைவர் சீதாராம் கேசரி நேற்று முற்பகல் இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மாவை குடியரசுத் தலைவர் மாளிகையில் சந்தித்து, தேவகௌடா அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை தமது கட்சி விலக்கிக் கொள்வதாகத் தெரிவிக்கும் மூன்று பக்கக் கடிதத்தை அவரிடம் கையளித்தார்.

மத்தியில் ஆட்சி அமைக்கும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் கௌடா பதவி விலக மறுப்பு

புதுடில்லி, மார்ச் 31

வெளியிலிருந்து வழங்கி வந்த ஆதரவை காங்கிரஸ் கட்சி விலக்கிக் கொண்டாலும் —

பிரதமர் தேவகௌடா பதவி விலக மாட்டார் என அவரது பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் தங்களது அரசு பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு ஜனாதிபதி சந்தர்ப்பம் தருவார் எனத் தாங்கள் நம்புவதாக அப்பேச்சாளர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றம் மீண்டும் அடுத்த மாதம் 21 ஆம் திகதி கூடும் போது சபையில் பிரச்சினையை எதிர் கொள்ளத் தாங்கள் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் —

தற்போது இடம்பெற

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மருதமுனையில் 2 பொலிஸார் பலி

கொழும்பு, மரர்ச் 31

மட்டக்களப்பு மாவட்டம் மருதமுனைப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு பொலிஸாருக்கும், புலிகளுக்கும் இடையில் நடந்த மோதல் ஒன்றில் இரு பொலிஸார் கொல்லப்பட்டனர்.

அவர்களின் ஆயுதங்களையும் புலிகள் அபகரித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

## தொடர்ந்து அரசை ஆதரிக்க தொண்டாவின் கட்சி முடிவு

கொழும்பு, மார்ச் 31

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்குத் தொடர்ந்தும் ஆதரவு வழங்கும்.

இ. தொ. காவின் தலைவரும் அமைச்சருமான தொண்டமான் நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாடு ஒன்றில் இதனைத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தல்களில் இ. தொ. காவுக்கு ஏற்பட்ட பின்னடைவுகள் குறித்து விரிவாக ஆராயப்படும் என்றும் —

இதற்குப் பொறுப்பாகவிருந்த பிரமுகர்களின் பதவிகளை மாற்ற அல்லது தேவையேற்படின் அவர்களைக் கட்சியிலிருந்தே விலக்கிவிட முடிவு எடுக்கப்படும் என்றும் —

தொண்டமான் மேலும் [illegible] ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்கும்படி கோரும் ஒரு கடிதம் தனது கையொப்பத்துடன் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டமை பற்றி குறிப்பிட்ட அவர், பெருந்தொகையான வாக்குகளைத் தமது கட்சி இழந்தமைக்கு இதுவே முக்கிய காரணம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## உடப்பில்தேடுதல்

கொழும்பு, மார்ச் 31

புத்தளம் உடப்பு பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை முதல் பொலிஸாரும்— இராணுவத்தினரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அப்பகுதியில் குடியிருக்கும் சுமார் ஆயிரத்து 200 தமிழர்களும் உடப்பு காளியம்மன் கோயிலடிக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். 20 பேர் விசாரணைக்காக கூட்டிச் செல்லப்பட்டனர்.

## தந்தை செல்வாவின் 99ஆவது ஜனன தினம்

### இன்று பல்வேறு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 31

தந்தை செல்வாவின் நூற்றாண்டு பிறந்த தினம் இன்றாகும். இதனையொட்டி தமிழ்ப்பகுதி எங்கும் தந்தை செல்வாவுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் இடம்பெறவிருக்கின்றன.

யாழ். நகரில்

யாழ். நகரில் முற்றவெளிப் பகுதியில் அமைந்துள்ள

(2 ஆம் பக்கம் பார்க்க)

## 9 அதிவேகப் படகுகள் அவசரமாக அமைப்பு

கொழும்பு, மார்ச் 31

கடற்படைக்கு அவசரமாக படகுகள்தேவைப்படுவதால்-

அரசின் அவசர பணிப்பின் பேரில் கொழும்பு 'டொக்யாட்' நிறுவனம் ஒன்பது கடற்படைக் கலங்களை —அதிவேகப் படகுகளை— நிர்மாணிக்கும் வேலையை துரிதமாகமேற்கொண்டு வருகின்றது.

ஜெட் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட படகுகளையும், அதிவேகத் தாக்குதல் கப்பல்களையும் நிர்மாணிக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வலய மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் 17 வயது ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்று, வடக்குக் கிழக்கு மாகாண அமைச்சால் திருகோணமலையில் நடத்தப்படவிருக்கும் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய உடற்பயிற்சி அணியினரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பெற்றோர்,
பழைய மாணவர்கள்.

யா/ ஆனைக்கோட்டை.
பாலசுப்பிரமணிய வித்தியாலயம். (46072)



## மனையியல் டிப்ளோமா
## புதிய வகுப்புகள் ஆரம்பம்

இன்று 31-03-97

★ கேக் ஐசிங் ★ தையல் ★ சமையற்கலை ★ கோலம் ★ பூவேலை (ஸ்ரொக்கிங் நெற், துணி, பேப்பர்கள்) ★ தலையலங்காரம் (இந்து, கிறிஸ்தியன் மணப்பெண் அலங்காரம்) ★ கைவேலை.

தொடர்பு: ஈஸ்வரன் கல்பனா (கவிதா)
இரும்பு மதவடி, மகாத்மா வீதி, நெல்லியடி, கரவெட்டி.
(45995)



## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
**The Jaffna Education Centre**

(சாந்தி சினிமா முன்பாக)

வகு. 5 — 10, O/L
**Spoken English with Grammar,**
சிங்களம், சுருக்கெழுத்து, தட்டச்சு
ஆகிய பாடங்கள், இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.

புதிய பிரிவு ஆரம்பம்: 01 - 04 - 1997
(46062) - நிர்வாகி


## கண்ணீர் அஞ்சலி

### அமரர் ச. முருகவேள்
(நல்லூர் பிரதேச சபை)

நல்லூர் பிரதேச சபை ஊழியர்
**அமரர் ச. முருகவேள் அவர்கள்**
மறைவினைக் கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடையும் நாம் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

விசேட ஆணையாளர், செயலாளர்,
சக உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்,

நல்லூர் பிரதேச சபை,
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
திருநெல்வேலி. (46075)

## விண்ணகவாழ்வின் 2-ம் வருடம்
### யோசெவ் பொன்னையா சிங்கராயர்

மலர்வு: 09 — 07 — 1925



உதிர்வு: 01 — 04 — 1995

வாழ்வில் அன்பு செய்தாய்
மறைவில் மறவாதிருப்போம்
மரித்து உயிர்த்த யேசு மீட்பரின் வெற்றியில்
பங்கேற்று அவரின் ஆறுதலிலும்
அமைதியிலும் நித்தியமும் வாழ்வாரர்க.

இவரின் நல்வாழ்விற்கு நன்றியாகவும், இவரின் ஆன்மசாந்திக்காகவும், இரங்கற் திருப்பலி அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை (நாளை) 1 - 4 - 1997 காலை 11 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர், பேரப்பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

அச்சுவேலி, (46074)

# மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என்கின்றனர் புலிகள்

கொழும்பு, மார்ச் 31

''இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுக்களை ஆரம்பிப்பதாயின் அதற்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமே அவசியம்'' — என்று விடுலைப் புலிகளின் பிரமுகர் சங்கர் தெரிவித்தார் என ''சண்டே ரைம்ஸ்'' நேற்று தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

மட்டக்களப்பில் வைத்து 'சண்டே ரைம்ஸ்' செய்தியாளருக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படித் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து வந்த அரசுகள் எம்மை ஏமாற்றி வந்திருப்பதை அடுத்தே இப்பிரச்சினையில் 3 ஆம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என்று கோருகின்றோம்.

3 ஆம் தரப்பு மத்தியஸ்தம் இரு நிபந்தனைகளின் பேரில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

★ வடக்கில் ''சூரியப்பிரகாசம்'' நடவடிக்கைக்கு முன் இருந்த இடங்களுக்கு படைகள் செல்ல வேண்டும்.

★ தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை ஏற்க வேண்டும்.

பேச்சு மூலம் நிரந்தர அமைதி ஏற்பட வேண்டும் என்பதே எமது விருப்பம். இது சாத்தியப்படாவிட்டால் ஆயுதப் போராட்டத்தைத் தொடர்வோம்'' —இவ்வாறு அவர் மேலும் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-150)

## சந்தை புனரமைப்பு

அச்சுவேலி, மார்ச் 31

அச்சுவேலிப் பொதுச் சந்தை 7 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படுகிறது.

மரக்கறி விற்பனைப் பகுதி, மீன் விற்பனைப் பகுதி என்பன திருத்தி அமைக்கப்ர்டுவதுடன் மாரிகாலத்தில் மழைவெள்ளம் தேங்கி நிற்கும் நிலப்பகுதியும் உயர்த்தம்பட்டு வருகின்றது.

(ஐ-11)

## அச்சுவேலி கடைகள் குத்தகைக்கு

அச்சுவேலி, மார்ச் 31

அச்சுவேலி சந்தையில் வியாபார நிலையங்களை அமைப்பதற்கு ஏற்ற 14 கடைகள் குத்தகைக்கு விடப்படவுள்ளது.

14 வியாபார நிலையங்கள் தொடர்பான கேள்விப் பத்திரம் பொதுமக்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளது.

(ஐ-14)

## சில...

(முதலாம் பக்கத் தொடர்)

கொழும்பில் இருந்து வெளிவரும் ''சண்டே ரைம்ஸ்'' ஆங்கிலப்பத்திரிகை இத் தகவலை வெளியிட்டுள்ளது.

முல்லைத்தீவுப் பகுதியில் எம். ஐ. 24 ஹெலி காணாமற் போனமைக்கு எதிரியின் நடவடிக்கை காரணமா? நேரடியாக அதை எதிரிகள் தாக்கினரா? அல்லது படையினர் மத்தியில் ஊடுருவி சதி செய்தார்களா? — என்பது குறித்து இன்னமும் அறியப்படவில்லை.

நேரடியாக எதிரி அதைத் தாக்கியிருந்தால் விமானத்தின் ஒரு துண்டாவது கைப்பற்றப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஒரு துண்டு கூட கைப்பற்றப்படவில்லை.

இது 'உள்வீட்டுச் சதி' வேலையாக இருக்கலாம் என்பது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விமானப்படைத் தளபதி ஒலிவர் ரணசிங்க சிரேஷ்ட அதிகாரிகளைச் சந்தித்து விமானப்படைக்குள் சதிச் செயல் நடக்கக் கூடிய வாய்ப்புக் குறித்து ஆராய்ந்துள்ளார்.

விமான இழப்புக்கள் தொடர்பாக விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ள அதே வேளை —

விமானப்படையைச்சேர்ந்த சில அதிகாரிகள் முகாம்களுக்குள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டு முடிவு எடுக்கப்படும் வரை அவர்கள் முகாம்களுக்குள்ளேயே நடமாட முடியும்; வெளியில் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

— இவ்வாறு அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

(உ-3-150)

# காவலில் உள்ள 170 பேர் விவரங்கள்

## 'புளொட்' யாழ். பணிமனையில்!

'சூரியப்பிரகாசம்' படை நடவடிக்கைகளின் போதும் பின்னரும் கைதாகி காங்கேசன்துறையிலும் நாட்டின் தென் பகுதியிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 170 இற்கும் மேற்பட்டோரின் பெயர்,முகவரி மற்றும் அவர்கள் தொடர்பான கோவை இலக்கங்கள் போன்ற விவரங்கள் கிடைத்திருப்பதாக 'புளொட்' அமைப்பின் யாழ். பணிமனை அறிவித்துள்ளது.

இப்பட்டியலில் உள்ளோரை நேரில் சென்று பார்வையிடவும், அவர்களின் விடுதலைக்கான முயற்சியில் ஈடுபடவும் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதால் —

பட்டியலில் உள்ளோரின் உறவினர்களை யாழ்ப்பாணம், முதலாம் குறுக்குத் தெரு, 5 ஆம் இலக்கத்தில் உள்ள பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு 'புளொட்' அமைப்பு கேட்டுள்ளது.

மேற்படி பட்டியலில் உள்ள பெயர் விவரங்களின் முதல் தொகுதி அடுத்து வரும் தினங்களில் உதயனில் பிரசுரமாகும்.

(உ)

## விசாரணைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

வாரம் கொழும்பு வரவிருக்கிறது.

சங்கிலித் தொடர் போல இடம்பெற்று வரும் விமான விபத்துக்கள் தொடர்பாக விசாரணை நடத்துமாறு பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சந்திரானந்த டி. சில்வா விடுத்த கோரிக்கையை அடுத்து விமானப்படை தளபதி ஒலிவர் ரணசிங்க இந்த குழுவை அழைத்துள்ளார்.

(உ-3-150)

## தந்தை செல்வாவின்...

(முதலாம் பக்கத் தொடர்)

தந்தை செல்வாவின் நினைவுத் தூபிக்கு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியை 'புளொட்' அமைப்பு செய்துள்ளது.

முற்பகல் 11 மணிக்கு இந்த நிகழ்ச்சி ஆரம்பமாகும். தொடர்ந்து அங்கு பொதுக் கூட்டம் இடம் பெறும்.

அதன் பின்னர் யாழ் வின்சர் தியேட்டர் சந்தியில் தந்தைசெல்வாவின்சிலையை நிறுவுவதற்காக அடிக்கல் நாட்டப்படும். தொடர்ந்து நகரில் தியாகி சிவகுமாரன், குட்டிமணி மற்றும் அமிர்தலிங்கம் ஆகியோரின் உருவச் சிலைகளை நிறுவுவதற்கான அடிக்கற்களும் நாட்டப்படும்.

**திருகோணமலையில்**

தந்தை செல்வா ஜனன தினத்தை ஒட்டி திருகோணமலையில் தந்தை செல்வாவின் உருவச்சிலை அமைந்துள்ள சிவன் கோயிலடிப் பகுதியில் இருந்து இன்று பிற்பகல் 3 மணிக்கு சமாதான ஊர்வலம் ஒன்று ஆரம்பமாகும்.

'புளொட்' அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் ஊர்வலத்தை ஆரம்பித்து வைப்பார்.

அதன் பின்னர் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும் பொதுக் கூட்டத்தில் 'புளொட்' அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் த. சித்தார்த்தன், எஸ். சண்முகநாதன், ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சந்திரகுமார், ஐ. தே. கவின் திருமலை மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் சுனில் சாந்த ஆகியோர் உரையாற்றுவர்.

**வவுனியாவில்**

தந்தைசெல்வாவின்பிறந்த தினத்தை ஒட்டி வவுனியாவில் மூன்று இன மக்களின் ஆலயங்களிலும் விசேட பிரார்த்தனை வழிபாடுகளுக்கு 'புளொட்' அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

(உ-3-150)

## அருட் தந்தைக்காக
## இரங்கற் திருப்பலி

**Rev. Fr. S. HILARY JEBANESAN**

29 – 03 – 97 புனித சனியன்று காலை அமரத்துவம் அலடந்த அருட்தந்தை சவரிமுத்து ஹில்லரி ஜெபநேசன் அடிகளாரின் நல்லடக்க ஆராதனை, கொழும்பில் எதிர்வரும் சித்திரை மாதம் 2ஆம் திகதி புதன் மாலை இடம்பெறவிருக்கிறது.

மறைந்த அருட்தந்தையின் பணிவாழ்வுக்கு நன்றியாகவும், அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகவும் யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் எதிர்வரும் புதன் மாலை 5. 30 மணிக்கு (புதிய நேரம்) கூட்டுத்திருப்பலி இடம்பெறும்.

அனைத்து குருக்கள், துறவியர், பொதுநிலையினரையும் பங்குகொண்டு அன்னாருக்காக செபிக்க அன்புடன் அழைக்கிறோம்.

தகவல்:
அருட்பிதா J. P. E. செல்வராஜா
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

(46077)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவில் பனிமழையை நிறுத்த முகில்களின் மீது இரசாயனம்

## விஞ்ஞானிகள் முயற்சி

மொஸ்கோ, மார்ச் 31

ரஷ்யாவில் மிகமோசமானது பனிக் காலம் என்பது உலகமே அறிந்த விடயம்.

நீண்ட காலமாக பனியில் வாழ்ந்து சலித்துவிட்ட — மொஸ்கோ நகர வாசிகள் இப்போது பனியை நிறுத்திவிட முடிவு கட்டி விட்டனர்.

முகில்கள் மீது இரசாயனத்தை தூவி பனியை உறையச் செய்து நகரத்துக்கு அப்பாலேயே தரையில் கட்டிகளாக விழ வைப்பதன் மூலம் மொஸ்கோ நகரத்தை பனியில் இருந்து பாதுகாப்பதே இத்திட்டமாகும்.

இரண்டாம் உலகப்போரின் 50 ஆவது ஆண்டு நிறைவு கொண்டாடப்பட்ட போதும்-

அதிபர் பொரிஸ் யெல்ட்சின் ரஷ்ய அதிபராக கடந்த ஒகஸ்டில் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட வேளையிலும் மொஸ்கோவில் சீரான வானிலை அமைவதை உறுதிசெய்யும் ஆயத்தங்கள் முன் கூட்டியே செய்யப்பட்டிருந்தன.

பனி முகில்களின் மேல் விமானங்கள் மூலம் இரசாயனப் பொருளை விசுறுவதன் மூலம் பனியை உறையச் செய்து விடும் திட்டத்துக்கான செலவு மிகக் குறைவு என்று ரஷ்யாவின் நீரியல் வானியல் நிபுணர் - கூறுகிறார்.

மொஸ்கோ நகர வீதிகளில் இருந்து பனியை வெட்டி அகற்றுவதற்கான பெரும் செலவை விட இது மிகக் குறைவானதே என்று கூறப்படுகிறது.

பனியை கட்டுப்படுத்தும் இம் முயற்சி சாத்தியமா என்று மேற்குலக விஞ்ஞானிகள் சந்தேகம் தெரிவித்தாலும்-

பின்விளைவுகள் எதுவாக இருப்பினும் சிந்தனையை பெரிதாகவே சிந்திக்கும் பாரம்பரியம் ரஷ்யர்களுடையது என்கிறார் பி.பி ஸி முகவர். (ஐ)

# ஜம்முவில் குண்டுகள் அடுத்தடுத்து வெடித்தன

## 17 பேர் பலி! 70 பேர் காயம்!!

ஜம்மு காஷ்மீரில் நேற்று முன்தினம் மாலை பஸ் நிலையப் பகுதியில் இடம் பெற்ற பெரும் குண்டு வெடிப்புகளினால் 17 பேர் பலியாகினர். எழுபதுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஜீப் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த சக்தி மிக்க குண்டே முதலில் வெடித்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர். பஸ் நிலையத்தில் நின்ற பஸ் ஒன்று இக் குண்டு வெடிப்பினால் சிதறியது. பயணிகள் பாதசாரிகள் உட்பட பலர் அவ்விடத்திலேயே உடல் சிதறிப் பலியாகினர்

சுமார் 25 நிமிடங்களின் பின்னர் இரண்டாவது குண்டு மோட்டார் சைக்கிளில் இருந்து வெடித்தது.

இதனால் எவருக்கும் சேதங்கள் ஏற்படவில்லை.

பஸ் நிலையப் பகுதியில் தங்கியிருந்த உல்லாசப் பயணிகள் உட்பட சுமார் 70 பேர் இக் குண்டு வெடிப்புகளினால் காயமடைந்தனர்.

இக் குண்டு வெடிப்புச் சம்பவங்களை கொடும் பயங்கரவாதச் செயல் என்று முதலமைச்சர் பாருக் அப்துல்லா கண்டித்தார். 'மாநிலத்தில் அமைதியைக் குலைக்க பாகிஸ்தானிய ஐ.எஸ்.ஐ. உளவாளிகளின் சதியே இதுவாகும்' என்று அவர் தெரிவித்தார்.

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே புதுடில்லியில் பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் வேளையில் இக் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. (ஐ)

# இஸ்ரேல் பொலீஸார் சூடு; பலஸ்தீன இளைஞர் பலி!

## பெரும் பதற்றம்! முறுகல் நிலை!!

மேற்குக்கரை, மார்ச் 31

சனியன்று இஸ்ரேலியப் பொலீஸாரின் சூட்டுக்கு பலியான 20 வயதான பலஸ்தீன இளைஞனின் மரணச் சடங்குகள் நடைபெறுவதை ஒட்டி மேற்குக் கரையில் பெரும் பதற்றம் உருவாகியுள்ளது.

ஆயிரக்கணக்கான பலஸ்தீனிய ஆர்ப்பாட்டக்காரர்கள் திரண்டிருப்பதை அடுத்து மேலதிகமாக ஆயிரக்கணக்கான படையினரை இஸ்ரேல் அப்பகுதியில் குவித்துள்ளதாக செய்திகள் கிடைத்துள்ளன.

கிழக்கு ஜெருஸலேமில் யூதக் குடியிருப்புகளைக் கட்டும் இஸ்ரேலின் திட்டத்தை அடுத்து உருவான நெருக்கடி மிகவும் மோசமான நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. (ஐ)

# பெண் எழுத்தாளர் காலமானார்

மும்பாய், மார்ச் 31

இந்தியாவின் புகழ்பெற்ற பெண் எழுத்தாளரும் கலைஞருமான புப்புல் ஜெய்கர் (வயது82) மும்பாயில் நேற்று முன்தினம் காலமானார்.

இந்திய கலைகலாசாரத்தை வெளிநாடுகளில் பரப்புவதில் அரும் பணியாற்றிய ஜெய்கர் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் நெருங்கிய தோழியாவார்.

இந்திரா காந்தியின் வாழ்க்கை வரலாறு உட்பட பல நூல்களை இவர் எழுதியுள்ளார். (ஐ)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

சங்க உப தலைவர் திரு. செல்லத்துரை வரப்பிரசாதம்
அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் செல்லத்துரை சிவசோதியம்மா**

திதி: 31 — 03 — 1997

அவர்கள் கடந்த 11 - 04 - 1996 இல் இறைவனடி சேர்ந்ததையிட்டு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எமது சங்கத்தின் சார்பில் பிரார்த்திக்கின்றோம்.

மயிலிட்டி ஊழியர் நலன்புரிச் சங்கம்
வலி. வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை.

(46053)

# நியூட்டன் அக்கடமி

கோண்டாவில் (கிளை 1)
பொற்பதிறோட் (கிளை 2)

## மீண்டும் ஆரம்பம்

சகல பாடங்களுக்கும், அதே தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| கணிதம் | — | திரு. எஸ். கருணாகரன் |
| விஞ்ஞானம் | — | திரு. இரா. அருட்செல்வம் |
| தமிழ் | — | திரு. ஞான. திருக்கேதீஸ்வரன்<br>திரு. பரமேஸ்வரன் |
| சமூகக்கல்வி<br>வரலாறு | — | திரு. இரா. கணேஷ் |
| சமயம் | — | திரு. ஞான. திருக்கேதீஸ்வரன் |
| வர்த்தகம் | — | பிரபல ஆசிரியர் |

**02-04-97 (புதன்) ஆரம்பமாகிறது**

★ மாதாந்தப் பரீட்சைகள்
★ அலகு ரீதியான வினா — விடை வகுப்புகள்

(46069)

# திரிபுரா தீவிரவாதிகள் மீது தடை

புதுடில்லி, மார்ச் 31

திரிபுரா பழங்குடிப்படை, மற்றும் திரிபுரா தேசிய விடுதலை முன்னணி ஆகிய அமைப்புக்களை இந்திய அரசு தடை செய்துள்ளது.

பிரதமர் தேவகௌடா தலைமையில் நடந்த மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த தடை உத்தரவு தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது.

திரிபுராவில் பழங்குடிகளுக்கும், பழங்குடிகள் அல்லாதோருக்கும் இடையே பதற்றத்தை உருவாக்கியதுடன் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அறிவித்தல்

சுன்னாகம்
பல நோ. கூ. சங்கம்
(வ-து) சுன்னாகம்.

## பயிலுநர் இலிகிதர் பதவி

மேற்படி பதவிக்கு யாழ். மாவட்டத்தில் வசிக்கும் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி:- **16-04-97**

விண்ணப்பப் படிவங்களையும், தகைமைகளையும், ஏனைய விவரங்களையும் ரூ. 10/- செலுத்தி வேலை நாள்களில் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சங்கத் தொழிற் பரப்பில் வசிப்பவர்களுக்கும், கூட்டுறவுப் பணியாளர் சாதாரணதரம் / உயர்தரம் சித்தியடைந்தோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

பொது முகாமையாளர்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
29-03-97

(சி/395)

# வீல் மூவர்ஸ்

மணிக்கூட்டு வீதியில் இயங்கி வந்த

## ஓட்டோ சப்ளையர்ஸ்

நிறுவனம்

தற்போது நல்லூர் கோயில் முன்பாக
**வீல் மூவர்ஸ்** என்ற பெயரில் இயங்கி வருகிறது
என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். எம்மிடம்:

* லான்ட்மாஸ்டர் குபோட்டா K 75, RK 80, யன்மார் 60
* நீர் இறைக்கும் இயந்திரம், வில்லியர்ஸ், றொபின் வூல்சிலி மற்றும்
* ஸ்ரீராம் ஹொண்டா முதலியவற்றின் உதிரிப் பாகங்களும் இவற்றுக்குரிய போர், சிலீவ் களையும் மொத்த மாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**ஓட்டோ சப்ளையர்ஸ்**

(641, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.)

(460[illegible])

# உலக அரங்கில்

## பணயக் கைதிகள் உடல் நிலை பாதிப்பு

லீமா, மார்ச் 31

பெருநாட்டில் லீமா நகரிலுள்ள ஜப்பானியத் தூதரகத்தில் ''துபக் அமாறு'' போராளிகளால் பணயக் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரில் சிலர் கவலையளிக்கும் வகையில் உடல் நலம் குன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நூறு நாள்கள் கடந்த பின்னரும் இந்தப் பணயக் கைதிகள் விவகாரத்திற்கு தீர்வுகாண முடியாததற்குக் காரணம் பெரு அதிபர் அல்பேட்டோ பிஜிமோறியின் [illegible] படுகிறது. (ஐ-10)

# நெஞ்சார வாழ்த்துகின்றோம்

எமது மக்கள் வங்கிக் கிளையில் முகாமையாளராகக் கடமையாற்றிய
**உயர்திரு. ஐ. கணேசலிங்கம் B. Com.**
அவர்களும்
உதவி முகாமையாளராகக் கடமையாற்றிய
**திரு. நா. சிவபாதம்**
அவர்களும்
தங்களது கால் நூற்றாண்டுக்கு மேற்பட்ட வங்கிச் சேவையிலிருந்து இன்றுடன் (31-03-1997) இளைப்பாறுகின்றனர்.

இப்பெரு மக்களின் இளைப்பாற்று வாழ்வு நலமுடன் விளங்க எம் நெஞ்சு நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழிய வாழியவே
நலமுடன் வாழியவே
அச்சம் தவிர்
ஆண்மை தவறேல்
ஈகை திறன்
உடலினை உறுதிசெய்
தெய்வம் நீ என்றுணர்.

முகாமையாளர் திரு. து. ரகு,
பிரதி முகாமையாளர் சண். பாலசுந்தரம்,
தலைவர், உறுப்பினர்கள்,
ஊழியர் நலன்புரிச் சங்கம்.
மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(9446)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

1½ மாதம் நிரம்பிய பொமன் இன சிவப்பு வெள்ளை பேட்டுக்குஞ்சு விற்பனைக்குண்டு. முகவரி; R. S. K. கோழிப்பண்ணை முருகபதி, உடுவில், சுன்னாகம் (மான்ஸ் பாடசாலை அருகில்). (46052)

500 Kg நிறுக்கக்கூடிய Avery மேடைத் தராசு (தயாரிப்பு இங்கிலாந்து- சீல்பண்ணப்பட்டது) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. சுபாஸ், இல. 6, 4ஆம், ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [46065]

பேக்கரிக்கு தேவையான கேக் பேப்பர்கப் எம்மிடம் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. குருபரன் 315 C, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. [46057]

### தவறிவிட்டது

தங்கராசா பிரியந்தன் (யாழ்/ புனித பரியோவான் கல்லூரி மாணவன்) என்பவரது இல. 090 3 0 0 1 8 7 9 விசேட அடையாள அட்டை, கல்லூரிக்கும் உரும்பிராய்க்குமிடையே தவறிவிட்டது. கண்டெடுப்போர் தயவு செய்து யாழ்/ புனித பரியோவான் கல்லூரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [46068]

### தேவை

நல்ல நிலையில் உள்ள. Portable Electric Organ [49 கட்டைகள், Keybord) Yamaha அல்லது Casio தேவைப்படுகிறது. வைத்திருப்போர் தொடர்பு கொள்ளும் முகவரி: 5, அச்சுக்கூட வீதி, யாழ்ப்பாணம். [9447]

### நாடகம் எழுதுவது?

எல்லோரும் நாடகங்கள் பற்றி அறிய வேண்டும் என்பதற்காகவே அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை இந்த நூலை எழுதினார். 50 ரூபாவுடன் நாடகங்கள் பற்றிய பல விடயங்களை அறியலாம். பூபாலசிங்கம் புத்தகசாலை. [45962]

### மணப்பெண் தேவை

ஜேர்மனியில் தொழில் புரியும் 36 வயது, அஸ்வினி நட்சத்திர (மொத்தபாவம் 12) ஆணுக்கு 31 வயதுக்கு உட்பட்ட அழகிய மணப்பெண் தேவை. க. திருஞானசம்பந்த சர்மா, ஸ்ரீ முருகன் சோதிட நிலையம், நல்லூர் வடக்கு வீதி. (46050)

### மணமக்கள் தேவை

தங்களுக்கு தேவையான மணமக்களின் தெரிவுக்கு நேரில் வருபவருக்கு விரைவில் பலனுண்டு. இலங்கைத் தொழிலுக்கு சேவை இலவசம். கடிதம் மூலம் தொடர்புக்கு முழுவிவரங்களுடன் தொடர்பு கொள்ளவும், முத்துக்குமாரு செல்லப்பா, புன்னாலைக்கட்டுவன் தெற்கு. [46042]

## சங்கீத சபை செயல் முறை பரீட்சைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 31

வட இலங்கை சங்கீத சபை நடத்தும் சகல பரீட்சைகளுக்குமான செயல் முறைத்தேர்வு ஏப்ரல் விடுமுறையின் போது நடைபெறவுள்ளது.

பத்துக்கு மேற்பட்ட நிலையங்களில் நடைபெறவுள்ள இத்தேர்வுக்கான நேர அட்டவணை அனுமதி அட்டை என்பன விரைவில் உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் எனத் தெரிவிக்கப்


## மலிவு விற்பனை

- ★ கர்(F)போம் பிறசியர்,
- ★ சில்வர் சீல்ட் சொக்ஸ் வகைகள்.
- ★ புடைவை வகைகள்,
- ★ பிஸ்கட் வகைகள்

மொத்தமாக மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

**சிறி முருகன்**
303, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(45992)


## வாழ்த்துகிறோம்

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக மக்கள் வங்கியில் பணியாற்றி, இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் அங்கத்தவராக இருந்து கொண்டு, வங்கி ஊழியர்களின் மேன்மைக்கும் வங்கியாளர்களின் பெருமையை நிலைநாட்டவும், சங்கத்தினால் நடத்தப்பட்ட வரலாற்றுப் பெருமைமிகு போராட்டங்களில் எல்லாம் கலந்துகொண்டு உழைத்த பின்வரும் எமது தோழர்கள், முடிவடையும் மார்ச் மாதத்துடன் தங்கள் சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார்கள். அவர்கள் தங்கள் ஓய்வு வாழ்க்கையில் சகல செல்வங்களும் பெற்று நலமாக வாழ வாழ்த்துகின்றோம்.

திரு. அ. கோபாலகிருஷ்ணன்
யாழ். கன்னாதிட்டி முகாமையாளர்
திரு. பி. தருமநாயகம்
யாழ். பிரதான வீதி முகாமையாளர்
திரு. க. மார்க்கண்டு
பிரதேச தலைமையலுவலக அந்தரங்கச் செயலாளர்
திரு. ந. சிவபாதம்
யாழ். ஸ்ரான்லி வீதி உதவி முகாமையாளர்
திரு. ம. மகேந்திரன்
காங்கேசன்துறை பிரதி முகாமையாளர்
திரு. ஆ. சண்முகநாதன்
ஊர்காவற்றுறை பதில் முகாமையாளர்
திரு. த. குணரட்ணசிங்கம்
யாழ். அடகுமீளல்பகுதி (கொழும்பு) முகாமையாளர்
திரு. ஆ. செல்லத்துரை
பருத்தித்துறை பதில் முகாமையாளர்
திரு. வே. சங்கரநாதன்
பருத்தித்துறை பிரதி முகாமையாளர்
திரு. ந. செல்வநாயகம்
சுன்னாகம் உதவி முகாமையாளர்
திரு. யே. பேதுருப்பிள்ளை
யாழ். கன்னாதிட்டி உதவி முகாமையாளர்
திரு. க. கணேசதாசன்
யாழ். கன்னாதிட்டி பிரதி முகாமையாளர்

மேலும் இத்தினத்தில் ஓய்வுபெறுகின்ற யாழ். பிரதேசத்தின் ஏனைய மக்கள் வங்கி ஊழியர்களையும் நாம் வாழ்த்தி நிற்கிறோம்.

வாழ்க! இலங்கை வங்கி ஊழியர் சங்கம்.

**இலங்கை வங்கி ஊழியர் சங்கம்**
(மக்கள் வங்கிக்கிளை – யாழ். மாவட்டம்)

(9439)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சின்னப்பு சின்னத்தம்பி (J.P.)**
(இளைப்பாறிய தபால் அதிபர்)

உதயம்: 02—08—1907
திருநிழல்: 18—03—1990
திதி: 31 – 03 – 1997

அன்புடனே அப்பா என்றும் அப்பப்பா என்றும்
உங்கள் பிரிவை ஆற்றாது உள்ளம் உருகிட
என்றும் கற்பக விநாயகன் கழல்நிழல் உறைந்திட
இன்றே போற் கழிந்தது [illegible]

[illegible]

நாவலடி,
பன்னாலை, தெல்லிப்பழை. (9443)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 01 — 10 — 1928



உதிர்வு: 15 — 02 — 1997

அமரர்
**வைத்திலிங்கம் தருமலிங்கம்**
(அரச ஒப்பந்தக்காரர்)

அன்பின் குலவிளக்காய், குடும்பத்தின் ஒளிவிளக்காய்,
பாசமிகு கணவனாய், பண்பு நிறைந்த தந்தையாய்,
பண்பான மாமனாய், பார் போற்றும் உத்தமனாய்,
அன்பான அண்ணனாய், அனைவர்க்கும் முதல்வனாய்,
அன்புடன் அனைவரையும் அரவணைத்து
வாழ்ந்த வேளை
அறிந்தோம் ஆண்டவன் உம்மை அழைத்த செய்தி
கட்டிய மனைவி பெற்ற செல்வங்கள் கதறியழ
மாமன் என அழைத்த மருமகன் ஏங்கிநிற்க
அண்ணா எனச் சொன்ன சோதரரும் கண்ணீர்
சொரிந்திடவே
ஆண்டவன் ஏன் உம்மை அழைத்தான் தன்னிடமோ
நாள்கள் நாற்பத்தைந் தாகியும் நம்மனதில்
உங்கள் நினைப்பே.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமகன், சகோதரர்கள்.

''அயோத்தியா''
பலாலி வீதி,
திருநெல்வேலி. (46032)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிலைய இயக்குநர்
அருட்தந்தை
**S.H. ஜெபநேசன் அடிகளாரின்**
மரணம் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது.


அன்பராய், நண்பராய்,
தந்தையாய், வழிகாட்டியாய் - நின்று
நீர் எம்மில் நிகழ்த்திவிட்ட
மென் உறவு,
எம் நெஞ்சங்களில் நிழலாட,
நீர் நிறைந்த கண்களுடன்
அஞ்சலிக்கின்றோம்.
இயேசுவின் மரணத்தோடு ஒன்றித்த நீவீர்,
நீடூழி வாழ்வீர் அவரோடு!

அருட்தந்தை இரா.சூசைநாதன் அடிகளாரும்,
யாழ். மனித முன்னேற்ற
நடுநிலையப் பணியாளரும்.

மத்தியூஸ் வீதி,
தியோகு பாதை, யாழ்ப்பாணம். (46070)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்





| அமரர் | அமரர் |
| --- | --- |
| **வினாசித்தம்பி வைரமுத்து** | **வைரமுத்து திலகநாதன்** |
| (ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர்) | (தொழில்நுட்பவியலாளர்,) National Apprentice Board |
| தோற்றம்: 22-07-1923 | தோற்றம்: 06-05-1956 |
| மறைவு: 24-03-1996 | மறைவு: 31-03-1996 |

நிலையில்லா வாழ்வினிலே நீங்கா நினைவுகளைத் தந்துவிட்டு நிலையான வாழ்வு தேடி நீங்கிச் சென்றீர்களோ?

எங்கள் குடும்பத்தின் தலைவரும், அன்புச் செல்வமுமான உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்**

''சிவபவனம்'',
சாரையடி, புலோலி. (சி/377)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வாவின் அரசியல் இலட்சியம்
# தமிழ் மக்களின் கலங்கரை விளக்கானது

யாழ்ப்பாணத்தான், மன்னாரான், மட்டக்களப்பான் எனவும் இன்னும் பல்வேறு விதமாகவும் பிளவுபட்டுக் கிடந்த ஈழத் தமிழினத்தை ஒன்று படுத்தி இந் நாட்டில் தமிழருக்கெனத் தனியானதொரு பிரதேசமும் மொழியும் பண்பாடும் உண்டென்பதை எடுத்துக் காட்டி, தமிழ் மக்கள் இந் நாட்டிலுள்ளதொரு சிறுபான்மை இனமல்ல; தனியானதொரு தேசிய இனமென்பதை வலியுறுத்தியவர் அமரர் சா. ஜே வே செல்வநாயகம் அவர்கள். அதனால் அவர் தமிழீழத் தேசியத் தந்தையென அழைக்கப்படுகின்றார்.

தமிழ் பேசும் மக்களின் வாழ்விடம் பறிக்கப்படுவதையும் மலையகத் தமிழரின் குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டதையும் கண்ட தந்தை, தமிழ் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை உண்டென்பதை வலியுறுத்தினார். தமிழீழ விடுதலைக்காக, அமரர்கள் கு. வன்னியசிங்கம், டாக்டர் ஈழம் முருகேசு விக்ரர் நாகநாதன், என். ஆர். இராசவரோதயன் முதலிய தமிழ்த் தலைவர்களோடு சேர்ந்து இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார்.

1949 - 12 - 18 இல் நடைபெற்ற கட்சியின் ஆரம்ப மகாநாட்டுக்கு சமர்ப்பிப்பதற்காக அவர்கள் வகுத்த கொள்கைத் திட்டம் ''ஐக்கிய இலங்கைச் சமஷ்டியின் ஓர் அங்கமாக மொழியை அடிப்படையாகக் கொண்டு ஒரு சுதந்திரத் தமிழரசை நிறுவி, இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களது விடுதலையைக் காண்பதே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நோக்கமாகும்'' எனக் கூறுகின்றது.

''...சமஷ்டி முறை ஏற்படுவதால் இலங்யையிலுள்ள இரு தேசிய இனங்களும் கௌரவமாகவும் சுயமரியாதையுடனும் வாழ வழி பிறக்கும் நாட்டின் அரசாங்கம் மதச் சார்பற்றதாய், ஆனால் நாட்டில் வகிக்கும் பிரசைகள் அனைவருக்கும் அவர்கள் இஷ்டப்படி சமயத்தை அனுஷ்டிக்க உரிமை அளிக்கும் அரசாங்கமாய் அமைய வேண்டும்'' என, இ. த. அ. கட்சியின் கொள்கைப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது. இவையெல்லாம் 'வாழ், வாழவிடு' என்னும் கொள்கையில் செல்வா கொண்டிருந்த பற்றுதியை எடுத்துக் காட்டுகின்றன.

## நம்பிக்கையை இழந்தனர்


தனது இலட்சியத்தை அடைவதற்காகப் பல சாத்வீகப் போராட்டங்களையும் சட்டமறுப்பு இயக்கத்தையும் நடத்திய தந்தை அதற்காகவே பண்டா — செல்வா ஒப்பந்தம், டட்லி—செல்வா ஒப்பந்தம் முதலியவற்றைச் செய்தார். இவ்வொப்பந்தங்களை மீறியதன் மூலம் சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்கள் தம்மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்தனர்.

''இந்நாட்டின் அரசகரும மொழியாக ஒரு மொழியை ஏற்றுக் கொள்வீர்களானால் இந்நாட்டில் இரண்டு நாடுகள் உருவாகுவதையும் நீங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டியிருக்கும்'' எனச் சிங்களம் மாத்திரம் சட்ட விவாவதத்தின்போது நாடாளுமன்றத்தில் கூறிய கலாநிதி கொல்வின். ஆர். டி. சில்வா, அரசமைப்பு அமைச்சராக இருந்த போது, தான் சொன்னதை மறந்து, தமிழரசுக் கட்சி சமர்ப்பித்த குறைந்த பட்சக் கோரிக்கைகளையே அரசமைப்பில் இடம்பெறச் செய்ய மறுத்தார்.

சிங்களத் தலைவர்கள், 'வாழ் வாழவிடு' என்னும் கொள்கையை நிராகரித்த போதிலும், அக்கொள்கையிலும் தமிழீழ விடுதலையைப் பெறுவதிலும் உறுதியாக இருந்த தந்தை செல்வா, சிங்களவர் தம்மையும், தமிழர் தம்மையும் ஆட்சி செய்வதற்குத் தமிழர் தமக்கெனத் தனியானதொரு தமிழரசை நிறுவுவதே வழியெனக் கருதினார்

அதனால், தமிழருக்கு உரிமையை வழங்க மறுத்த அரசமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக, தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தார். அது காரணமாகக் காங்கேசன்துறைத் தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலின்போது, தந்தை செல்வா தமிழீழக் கோரிக்கையை முன்வைத்துப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

தமது இலட்சியத்தை வென்றெடுப்பதற்காக, தமிழ் பேசும் மக்களின் ஐக்கியத்தைப் பலப்படுத்தக் கருதிய தந்தை செல்வா, தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கி, அதன் தலைமைப்



பதவியையும் பகிர்ந்தளித்தார்.

அவர் நாடாளு மன்றத்தில் நிகழ்த்திய தமது இறுதியுரையில், ''இப்பொழுது நாங்கள், தமிழர்களாகிய எங்களுக்குத் தனிநாடு கேட்கின்றோம். இது பற்றி நாம் அறிவித்தல் தந்து விட்டோம். இப்பாதையில் உள்ள துன்பங்களை நன்கு உணர்வோம். ஆனாலும் எவ்வித தடைகள் ஏற்படி

மட்டுவில்
**ஆ. நடராசா**

னும், இந்த நாட்டின் விசுவாசமான பிரசைகளாக இருப்பதற்கு இதைவிட வேறு ஏதும் எங்களால் செய்யமுடியாது. முழுத் தமிழினத்தினதும் ஒரே பேச்சாளனாக, தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த முடிவை வெளியிடும் பிரதிநிதியாக உங்கள் முன் பேசிக் கொண்டிருக்கின்றேன்.', என்றார்.

நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமுங் கொண்ட, தமது அரசியல் வாழ்வில் என்றுமே சோரம் போகாத தந்தை செல்வாவின் இலட்சியம் தமிழ் பேசும் மக்களுக்கோர் கலங்கரை விளக்காக அமைந்து விட்டது. அவருடைய இலட்சியம் எத்தனையோ செல்லடிகளுக்கும், குண்டுவீச்சுக்களுக்கும் மத்தியிலும் நிலை குலையாது நிமிர்ந்து நிற்கும் அவரது நினைவுத் தூபி போல, தமிழ் மக்களது உள்ளங்களில் உறுதியாகப் பதிந்திருக்கிறது. ★

## செல்வாவின் அரசியல் வாழ்க்கை (1947 இல் இருந்து 1977 வரை)

★ இலங்கைத் தமிழ் காங்கிரஸ் சார்பில் 1947 ஆம் ஆண்டு காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார் செல்வா.

★ 20-8-48 இலும், 10-12-48 இலும் நாடாளுமன்றத்தில் இலங்கைக் குடியரசுச் சட்டம், இந்திய பாகிஸ்தானியர் குடியுரிமைச் சட்டம் சமர்ப்பிக்கப்பட்ட போது அச் சட்டங்களுக்கு எதிராக வாக்களித்துக் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறினார்.

★ 1949 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18 ஆம் திகதி மருதானையிலுள்ள அரசாங்க லிகிதர் சேவைக்கட்டடத்தில் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்து அதன் தலைவரானார்.

★ 1952 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சி வடக்குக் கிழக்கு மாகாணங்களில் போட்டியிட்டது. செல்வா காங்கேசன் துறையில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தார்.

★ 1953 ஒகஸ்ட் 12 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சி அரிசி விலையை அதிகரித்ததை எதிர்த்து நாடு முழுவதும் நடைபெற்ற, ஹர்த்தாலை வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழரசுக் கட்சிக்குத் தலைமை வகித்து நடத்தி வெற்றி பெறச் செய்தார்.

★ 1954 இல் ஐ. தே. கட்சியின் களனி மாநாட்டில் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்த சேர் ஜோன் கொத்தலாவலை யாழ். நகர் வந்தபோது, அவரை எதிர்த்து யாழ். மாநகரசபை மண்டபத்தின் முன் தமிழரசு வாலிப முன்னணி கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டஞ் செய்த போது செல்வாவும் உடனிருந்தார்.

★ 1956 பெப்ரவரி 20 ஆம் திகதி சிங்களம் மட்டும் கொள்கைக்கு எதிராக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் முதலாவது ஹர்த்தாலை நடத்தினார்.

★ 1956 ஏப்ரல் 10 ம் திகதியன்று நடந்த பொதுத் தேர்தலில் 14 வேட்பாளர்களை வடக்கு — கிழக்கில் நிறுத்தி 10 இடங்களில் வெற்றி பெறச் செய்தார். இதன் மூலம் தமிழ் மக்களின் ஏகோபித்த தலைவராகச் செல்வா விளங்கினார்.

★ 1956 ஜூன் 5 ஆம் திகதி சிங்களம் மட்டும் சட்டத்திற்கு ஏதிராகக் கொழும்பு காலி முகத்திடலில் முதலாவது சத்தியாக் கிரகப் போராட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

★ 1956 ஒகஸ்ட் மாதத்தில் 17, 18, 19 ஆம் திகதிகளில் தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து பாத யாத்திரை ஏற்படுத்திப் பிரசித்தி பெற்ற திருமலைத் தீர்மானத்தைக் கொண்டுவர உழைத்தார்.

★ 1957 ஜனவரி 19 ஆம் திகதி சிங்கள ஸ்ரீ எதிர்ப்புச் சட்ட மறுப்பு போராட்டத்தை யாழ். முற்ற வெளியில் ஆரம்பித்து வைத்தார்.

★ 1957 ஜூலை 26 இல் பிரசித்தி பெற்ற பண்டா — செல்வா ஒப்பந்தை உருவாக்கித் தமிழ்ப் பகுதிகளுக்கு மாநில சுயாட்சியுள்ள பிரதேச சபைகளை உருவாக்குவதற்கு முயன்றார்.

★ 1957 பெப்ரவரி 4 ஆம் திகதி சுதந்திர தினத்தை வடக்கு — கிழக்கு துக்கதினமாக அனுஷ்டிக்கத் தமிழரசுக் கட்சி தீர்மானித்தது. அதன்படி துக்கதினம் அனுஷ்டித்த போது திருமலை மணிக்கூண்டுக் கோபுரத்தில் கறுப்புக் கொடியைப் பறக்கவிட்ட நடராசன் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார். தமிழரசுத் தந்தையின் அறப் போராட்ட காலகட்டத்தில் உயிர்த் தியாகம் செய்த முதல் தமிழ் மகன் நடராசன் நிலை குறித்து மனம் வருந்தி அறிக்கைவிட்டார்.

★ 1958 மே 24 இல்வவுனியாவில் கூடிய தமிழரசுமாநாடு மீண்டும் அரசின் மீது போர்ப் பிரகடனஞ் செய்தது இதனால் தென்னிலங்கையில் இனக்கலவரம்வெடித்தது.

★ 1958 ஜூன் 5இல் செல்வா தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதுடன் தமிழரசுக் கட்சியும் அவரது சொந்தப் பத்திரிகையான சுதந்திரனும் தடை செய்யப்பட்டன.

★ 1960 ஏப்ரலிலும் ஜூலையிலும் இரு பொதுத் தேர்தல்கள் நடக்க தமிழரசுக் கட்சியே காரணமாக இருந்தது.

★ 1960 மேமாதம் தமிழ் மக்களுக்கு உரிமை வழங்க மறுத்த டட்லி சேனநாயக்கா அரசாங்கத்தை தமிழரசுக்கட்சி வீழ்த்தி மீண்டும் ஒரு பொதுத் தேர்தலை உண்டாக்கியது.
இவ்விரு தேர்தல்களிலும் தமிழரசுக் கட்சியே தமிழினத்தின் பெரும்பான்மைக் கட்சியாகத் தெரிவு செய்யப்பட்டது. செல்வா தலைவராக விளங்கி வழி நடத்தினார்.

★ 20-2-61 இல் அரசாங்க அலுவலகங்களில் சத்தியாக்கிரகம் நடைபெற்றது. யாழ். கச்சேரிச்சத்தியாக்கிரகத்தை செல்வா தலைமை வகித்து நடத்தினார்.

★ 16 - 3 -1961 இல் செல்வா சத்தியாக் கிரகத்தில் ஈடுபட்டிருக்கும் போது அவரது தாயார் திருமதி கரியற் அன்னம்மா வேலுப்பிள்ளை காலமானார்.

★ 17-4-1961 இல் செல்வா தடுப்புக் காவல் கைதியானார், முதலில் பானாகொடை இராணுவ முகாமிலும், பின்னர் நோய் வாய்ப்படவே தமது வீட்டிலும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.

★ 15-7-1961 இல் தடுப்புக்காவலில் இருந்து போது சத்திர சிகிச்சையின் பொருட்டு லண்டன் பயணமானார்.

★ 1965 மார்ச் தேர்தலில் தமிழரசுக் கட்சி செல்வா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்துக் காந்தியெனும் எங்கள் செல்வா

மாறுபடு பகைவர் தமை வெற்றிகொள்ள
மாண்பரிய அகிம்சைவழி கண்ட சீலன்
வேறு வழி இல்லையென விதந்து அன்று
வியனுலகுக்கறை கூவி நின்ற தீரன்
கூறுபடத் தமிழினம் தான் பிரிந்த காலை
கூற்றமது வேறிலை உணர்வீர் என்றோன்
ஆறுதலை எமக்களிக்க உழைத்த வீரன்
அதுவொன்றே அகந்தனிலே என்றும் வாழும்

நூறு நல்லாண் டின்று தொடக்கம் ஐயா
ஆறுவோம் உன்னரிய செயலை உன்னி
பேறுடைய பெருந் தலைவா பைந்தமிழர்
பேசரிய பண்புடைய செல்வா மண்ணில்
பேறுண்டோ உனையன்றி எங்களுக்கு
நூறென்ன நூறாகக் காலம் செல்லும்
நுவல வொண்ணா இலட்சணங்கள்
ஒருங்கே பெற்ற ஆடாத அசலம் நீ

ஈழத்துக் காந்தி யெனும் எங்கள் செல்வா
என்றென்றும் நினைவகலாக் கர்மவீரன்
நன்றொன்று சொன்னாயே அன்று ஐயா
பாரினிலே தமிழனையே காக்கஅந்த
பரம் பொருளால் மட்டும்தான் முடியுமென்றாய்
அரம்போலும் கூர்மை யரால் அறியலாகும்
மரம் போலும் மண்ணர்களால் உணர வொண்ணா
கரம் தந்த கர்மவீர காலமெலாம் வாழ்வாயப்பா

- கோ. சி. வேலாயுதம்.

## தந்தை செல்வாவிற்கு அஞ்சலி

தந்தைசெல்வா என்றுதினம் இந்த நாட்டின்
தமிழரெல்லாம் தலைமேலே வைத்துப் போற்றி;
முந்துபெரும் ஈழத்துக் காந்தி என்று;
முறை முறையே சொல்லுபுகழ் மூத்த ஊற்றை;
வந்ததுவும் வருகின்ற வினையும் நீங்க
வாழ்வாங்கு வாழ்ந்துயர்ந்த மனிதன் தன்னை(ச்)
தந்துநிறை நூற்றாண்டில் ''காந்தி'' வைத்த
சத்தியத்தின் தேர்வினை சார்ந்து நிற்போம்.

- முருகனடியான்

## கலந்துரையாடல்

யாழ். உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவன முதலாம் வருட பகல்நேர மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது மாணவர்களை அதில் கலந்து கொள்ளுமாறு மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளனர் (ஐ)

## ஜே-76 அ. அட்டை

சுண்டுக்குளி வடக்கு ஜே- 76 கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கானவிசேட அடையாள அட்டைகள் [illegible] வாய்க்கிழமை காலை 9 மணி முதல் கிராமசேவையாளரது பணிமனையில் வைத்து வழங்கப்பட உள்ளன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச்சந்நிதி உயர்திரு. முருகேசு சுவாமிகளின்
## 16 ஆவது நாள் நினைவஞ்சலிச் சிறப்பு மலர்

31 - 03 - 1997

# சந்நிதியுடன் இரண்டறக் கலந்த தவத்திரு முருகேசு சுவாமிகள்

ஆற்றங்கரை முருகனின் அருளைப் பெற்று அவனுடன் இரண்டறக் கலந்து பேரின்பம் பெற்று விளங்கியதுடன்; செல்லப்பா சுவாமி, யோகர் சுவாமிகள் வரிசையில் வைத்து மதிப்பிடக் கூடிய நடமாடும் தெய்வமாகவும் விளங்கியவர் முருகேசு சுவாமிகள் எனக் கூறலாம்.

இன்றைய காலகட்டத்தில் மக்களை பக்தி மார்க்கத்தில் ஈடுபடுத்தி, தர்ம வாழ்க்கையில் நெறிப்படுத்தக் கூடிய செயற்பாடுகளே மிகவும் அவசியமாக வேண்டப்படுகின்றன. இந்த வகையில் படித்தவர்கள், பாமர மக்கள், வர்த்தகர்கள், இளம் சமுதாயத்தினர் ஆகிய அனைத்துப் பிரிவினரையும் பக்தி மார்க்கத்துக்கு திசை திருப்புவதிலும் தர்ம நெறியில் வழிப்படுத்துவதிலும் முருகேசு சுவாமிகள் ஆற்றிய தொண்டை வேறு எவரினது தொண்டுடனும் ஒப்பிட முடியாது எனத் துணிந்து கூறலாம்.

அன்னதானக் கந்தன் என்று சிறப்புப் பெயர் பெற்ற சந்நிதி கோயிலின் சிறப்பை தொடர்ந்து பேணுவதற்கு அங்கே அன்ன தானப்பணி எந்தவித குறையுமின்றி தொடரப்பட வேண்டியது அவசியமாகும். ஆனால் அந்தப் பணியில் ஈடுபட்ட ஏறத்தாழ ஐம்பது மடங்களில் ஒரு சிலவற்றைத் தவிர ஏனையவை நாட்டுச் சூழலாலும் பல்வேறு காரணங்களாலும் இயங்க முடியா திருப்பதைக் காண்கின்றோம்.

இந்நிலையில் எமது சந்நிதியான் ஆச்சிரமம் தற்பொழுது இயங்கிக் கொண்டு இருக்கும் இடத்தில் புதிதாக அமைக்கப்பட வேண்டிய அவசிய தேவை ஏற்பட்ட போது, எந்தவித தயக்கமுமின்றி அதன் கட்டுமாணப் பணியின் பெரும் பகுதியை தாமே பொறுப்பேற்று செய்து முடித்தார்கள். இவ்வாறு முருகேசு சுவாமிகள் மேற்கொண்ட பெரு முயற்சியினால் தான், புதிய இடத்தில் இயங்கும் சந்நிதியான் ஆச்சிரமம், 1995 ஆம் ஆண்டு வைகாசி மாதம் முதல் செயற்படத் தொடங்கியது.

இவ்வாறு முருகேசு சுவாமிகளின் பெரு முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்ட சந்நிதியான் ஆச்சிரமம் இன்று வரை எந்தக் குறைவுமின்றி சுவாமிகளின் விருப்பப்படி அன்னதானத் தொண்டை மேற்கொண்டு வருவது குறிப்பிட்டுக் கூற வேண்டிய அம்சமாகும்.

வேறு எந்தக் தானங்களைச் செய்தாலும், போதும் என்ற வார்த்தை வருவதில்லை. அன்னதானத்தை வழங்கும் பொழுதே போதும் என்ற வார்த்தை இதய சுத்தியுடன் வருவதைக் காண்கின்றோம். இத்தகைய ஒரு சிறந்த பணிக்காக சுவாமிகள் தன்னை அர்ப்பணித்தது மட்டுமன்றி அத்தொண்டுக்காக பொருளை அள்ளி வழங்குகின்ற தர்ம சிந்தனை படைத்த ஒரு மக்கள் கூட்டத்தினையும் உருவாக்கிச் சென்றுள்ளதும் மனங்கொள்ளத்தக்கதாகும்.

சைவத்துக்கும் தமிழுக்கும் பெருமை பெற்றுத்தந்து, சைவசமயம் மக்களுக்கு வழிகாட்டி எமது மதத்தை நெறிப்படுத்தி வாழ்ந்த 63 நாயன்மார்களையும் நினைவு கூர வேண்டியது சைவமக்களது தலையாய கடமை என்பதை சுவாமிகள் உணர்ந்தார். ''அறுபத்துமூவர் பூசை'' என்ற வகையில் அவர்களுக்கு பூசை செய்யும் முறையையும் முருகேசு சுவாமிகள் விரும்பி எமது ஆச்சிரமத்தில் மேற்கொண்டு வந்தார். இந்தப் பூசையில் அறுபத்துமூன்று அடியார்களை அறுபத்து மூன்று நாயன்மார்களாகப் பாவனை செய்து மகேசுர பூசை நடைபெறும். இந்தப் பூசையின் போது பாடப்படும் பாடல்களும், பூசையின் முறையும் பக்தி மார்க்கத்தில் எவரையும் இலகுவாக ஈர்க்கும் வல்லமை பொருந்தியவை என்பதை இதில் பங்கு கொண்டவர்கள் நன்கு அறிவர்.

சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு மட்டுமன்றி, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆத்மீகப் பணிகளைக் கண்டு அகமகிழ்ந்தது மட்டுமன்றி, எம்மை உற்சாகப்படுத்தி பேரவையின் பணிகளைத் தொடர்ந்து நாம் செய்து வருவதற்கு உந்து சக்தியாகவும் சுவாமிகள் விளங்கி வந்துள்ளார்கள். எமது பேரவையால் வெளியிடப்பட்ட ''அருள்க்கனி'' மலர் வெளியீட்டுக்கு ஆசியுரை வழங்கி அதனை வெளியீடு செய்து வைத்ததுடன், முருகன் அடியார்களை இந்த மலர் சென்றடைய வேண்டும் என்பதற்காக, அதன் விற்பனைச் செயற்பாட்டின் கணிசமான பகுதியையும் தானே பொறுப்பெடுத்துக் கொண்டார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக சந்நிதி முருகன் அமைந்திருக்கும் ஆலயத்தின் புனரமைப்பு வேலைகளும் அங்கே நடைபெறும் பூசைகளும் குறைவின்றி செயற்பட வேண்டும் என்பதற்காக அவர் மேற்கொண்ட செயற்பாடுகள் சந்நிதி வரலாற்றில் என்றும் அழியாத இடம்பெற வேண்டியனவாகும்.

சந்நிதியான் ஆச்சிரமம்
செல்வச்சந்நிதி
தொண்டைமானாறு


உயர்திரு.
வே. முருகேசு
சுவாமிகளின்
16 ஆம் நாள்
அஞ்சலி விழா
சந்நிதியான்
ஆச்சிரம மண்டபத்தில்
நல்லை
ஆதின முதல்வர்
தலைமையில்
இன்று நடைபெறும்.
மலர் வெளியீடும், பல பெரியோர்களின் சிற்றுரைகளும் அங்கு இடம்பெறும் இறுதியில் மகேசுர பூசையும் நடைபெறும்.

(விளம்பர இல. சி-396)




## முருகபக்தர் முருகேசுசுவாமிகள்

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம், அங்கே நடைபெறும் பூசைகள், அங்கே மேற்கொள்ளப்படும் அன்னதானப் பணி என்ற சிந்தனைகளுடன் வாழ்ந்து அந்த சிந்தனைகளுடனேயே இறைவனடி சேர்ந்தவர் முருகேசு சுவாமிகளாவார்.

எமது ஆலயம் 1987 ஆம் ஆண்டு ''ஒப்பறேஷன் லிபறேஷன்'' நடைபெற்ற காலத்தில் மோசமாக அழிவடைந்து நித்திய பூசைகள் தடைப்பட்டிருந்தன. அந்தக் காலத்தில் நித்திய பூசைகள் ஆரம்பிக்கப்படுவற்கு வேண்டிய பொறுப்புக்களை தாமே ஏற்றுக்கொண்டு எம்மை எல்லாம் அதில் ஈடுபடுத்தி ஆலயத்தை புனரமைப்புச் செய்து நித்திய பூசைகளை மீண்டும் ஆரம்பித்து வைத்தார்கள். சுவாமிகளின் முயற்சியால் 1987 இல் ஏற்படுத்தப்பட்ட நித்திய பூசை செயற்பாடு அதற்கு பின்பு ஏற்பட்ட மிக நெருக்கடியான காலகட்டத்தில் கூட ஒரு நாள் கூட தடைப்படாமல் மேற்கொள்ளப் பட்டு வருவது ஓர் அற்புதமான செயற்பாடென்றே கூற வேண்டும்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் பூசை எவ்வளவு முக்கியமோ அதே போல அன்னதானப் பணியும் பிரதானமானதாகும். முருகேசு சுவாமிகள் அடிக்கடி எம்மிடம் இப்படிக் கூறுவார். அதனைச் செயற்படுத்துவதற்காக சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு அவர் செய்த பங்களிப்பு அளப்பரியது. ஒரு பைக்கற் சிமெந்து ஆயிரத்து ஐந்நூறு ரூபா விற்கின்ற கால கட்டத்தில் கூட அந்த ஆச்சிரமத்தின் புதிய கட்டட வேலைகளைத் தொடர்ந்து செயற்படுத்தி அங்கே நிலையாக அன்னதானப் பணி நடைபெறுவதற்கு வழிகாட்டினார்கள்.

ஆலயத்தின் புனரமைப்பு, ஆலயத்தின் பூசை, அன்னதானப்பணி ஆகிய செயற்பாடுகளில் தான் ஈடுபாடு காட்டியது போல ஏனைய பல அடியார்களையும் அதில் ஈடுபடுத்தியுள்ளார்கள்.

ஆகவே சுவாமிகள் இறைவனடி சேர்ந்தாலும் அவரது பணிகள் சந்நிதியில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

1920-05-23 இல் இவ்வுலகில் அவதரித்த முருகேசு சுவாமி இறுதிக் காலத்தில் செல்வச்சந்நிதியில் இருந்து அங்கிருந்தே முருகன் திருப்பாதங்களை அடைவதற்கு திருவுள்ளம் கொண்டிருந்தார்கள். இதற்கிணங்க ஏறத்தாழ $2\frac{1}{2}$ மாதங்கள் ஆலயச் சூழலிலுள்ள எனது வீட்டில் தங்கியிருந்தார். ஏற்கனவே சுவாமிகள் கூறியவாறு ஞாயிற்றுக்கிழமை தன்னை முருகன் அழைக்கிறான் என்பதற்கிணங்க 16-03-97 ஞாயிற்றுக்கிழமை மிகவும் அமைதியான முறையில் இறைவனடி சேர்ந்துள்ளார்கள். சுவாமிகளின் விருப்பப்படி சந்நிதியின் சுற்றாடலில் அமைந்துள்ள வெல்லங்கிராய் மயானத்திலேயே சுவாமியின் பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டது.

சுவாமிகளின் தெய்வப் பணிகளை நாம் எல்லோரும் தொடருவோமாக.

**ஆ. அருணாசலம்**
ஸ்ரீ செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

# செல்வாவின்....

(ஐந்தாம் பக்கத் தொடர்)

தலைமையில் பெரு வெற்றி பெற்றது.ஐ.தே. கட்சியும், சுதந்திரக்கட்சியும் செல்வாவின் ஆதரவை ஒரே சமயத்தில் நாடின. செல்வா ஐ.தே. கட்சியை ஆதரித்துத் தேசிய அரசாங்கத்தை நிறுவ உதவினார். கட்சியின் கட்டளையை ஏற்று மத்தியில் பதவி எதனையும் ஏற்காது சாதாரண எம்.பி. யாகவே விளங்கினார்.

★ 1970 மே 27 ஆம் திகதி நடந்த பொதுத்தேர்தலில் தமிழரசுக் கட்சி 13 பிரதிநிதிகளுடன் நாடாளு மன்றம் சென்று அரசியல் வரலாறு படைத்தது. வடக்கு கிழக்கை இணைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் தலைவரானார்.

★ 1972 மே 14 ஆம் திகதி திருகோணமலையில் உருவாகிய தமிழர் கூட்டணியின் தலைவராகச் செல்வா தெரிவானார்.

★ 1972 மே 22 ஆம் திகதி புதிய அரசமைப்புச் சட்டத்தை மீறி தமிழ் ஈழமெங்கும் 3 நாள் ஹர்த்தால், பாடசாலைப் பகிஷ்கரிப்பு நடத்தி முடித்தார்.

★ 1972 அக்டோபர் 2 ஆம் திகதி தபாற் கட்டணத்தை மீறி முத்திரைப் போராட்டம், உண்ணா விரதம் என்பவற்றில் முன்னின்றார்.

★ புதிய அரசமைப்புச் சட்டத்துக்கு சவால் விட்டு 03-10-72 இல் செல்வா தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்தார்.

★ 1973 ஏப்ரல் 6 ஆம் திகதி புத்தூரில் தமிழர் கூட்டணியின் சட்டமறுப்புப் பாடசாலை ஒன்று நிறுவினார். 1973 செப்ரம்பர் 7 ஆம் திகதி மல்லாகத்தில் கூடிய தமிழரசுக் கட்சி, கட்சியின் இலட்சியம் தமிழ் ஈழத்துக்குத் தன்னாட்சி பெறுவதென தந்தை செல்வா முன் பிரகடனப் படுத்தியது.

★ 06-02-73 இல் நடைபெற்ற காங்கேசன்துறை இடைத் தேர்தலில் 16,470 மேலதிக வாக்குகளினால் செல்வா வெற்றி பெற்றார்.

★ 19-9-75 இல் செல்வாவின் இல்லத்தில் கூடிய தமிழர் கூட்டணியினர் தேசிய அரசுப் பேரவையில் தனிநாடு தீர்மானம் கொண்டு வருவதாகத் தீர்மானித்தனர்.

★ 4-2-76 இல் தமிழ் ஈழத் தீர்மானநாள் தமிழ்ப் பிரதேசங்களில் உதய சூரியன் கொடியேற்றிக் கொண்டாடப்பட்டது.

★ 23-3-77 அன்று, தமிழ் மக்களின் நம்பிக்கைப் பேரொளியாக விளங்கிய தந்தை செல்வா தெல்லிப்பழையிலுள்ள தமது இல்லத்தில் [illegible]கி விழுந்தார். 26-4-77இல் [illegible]யில் இரவு 9 மணியளவில் அமரரானார்.

(தொகுப்பு : புத்தொளி)

## அம்மை நோய் பரவுகிறது

அச்சுவேலி, மார்ச் 31

வெப்பநிலை அதிகரித்து கடும் வரட்சி நிலவுவதால் கொப்பளிப்பான், சின்ன முத்து, கண்நோய் போன்ற வெப்புநோய்கள் பரவி வருகின்றன.

இந்தநோய்களினால் பலர் பீடிக்கப்பட்டு வருகின்றனர். அத்துடன் தோல் நோய்களும் சிரங்கு போன்றதொற்று நோய்களும்பரவத் தொடங்கியுள்ளன.

வவுனியா முகாம்களில் தங்கியிருந்து குடாநாட்டுக்குத் திரும்பிய சிறுவர்கள் பெருமளவில் நோய்த் தொற்றுக்கு உள்ளாகிப் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தந்தை செல்வா

ஈழத் தமிழ் மக்களின் தனிப்பெரும் தலைவர் தந்தை செல்வாவின் 99 ஆவது அகவை நிறைவு நாள் இன்றாகும். இன்று தொடக்கம் அவரது நூறாவது ஆண்டு நினைவு நிகழ்வுகளை அடுத்த ஆண்டு இதே திகதிவரை நடத்துவதற்குத் தமிழ் மக்கள் ஆயத்தமாகி உள்ளனர்.

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த பின்னர், தமிழர்களுக்கு அரசியல் துறையில் தக்கவாறு விழிப்புணர்ச்சி ஏற்படுத்திய ஒப்பற்ற தலைவர் தந்தை செல்வநாயகம் அவர்களே.

தமிழர்கள் ஒரு தனியான தேசிய இனத்தவர்கள். அவர்களுக்கென மரபு வழித் தாயகம் உண்டு. அவர்களது இழக்கப்பட்ட இறைமையும், ஆட்சி உரிமையும் மீள்விக்கப்பட வேண்டும். அவர்களுக்குச் சுய நிர்ணய உரிமை உண்டு. அவர்கள் விரும்பினால் பிரிந்து போகும் உரித்தும் உடையவர்கள். இத்தகைய கருத்துக்களை நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் ஓங்கி ஒலித்தவர் அமரர் செல்வநாயகம்.

சிங்கள மக்களுடன் தமிழர்கள் நல்லுறவாக, கூட்டுறவாக வாழ்வதற்கு நியாயமான ஏற்பாடுகளைச் செய்வதற்காக முயன்றவர் தந்தை செல்வா. அந்த முயற்சிகள் வெற்றியளிக்காதிருக்கத் தொடர்ந்து தடைகளைப் போட்டு வந்தனர் சிங்களத் தலைவர்கள்.

அதனாலேயே அவர் இறப்பதற்கு முன்னர் அப்போதைய தேசிய அரசுப் பேரவையில் உரையாற்றுகையில் —

''ஒரு சமஷ்டிக் கூட்டாட்சி யாப்புக்கான கோரிக்கையை நாம் கைவிட்டு விட்டோம்......''என்றார்.

1957 ஆம் ஆண்டில் அவர் அப்போதைய பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் தமிழர்களுக்கு அவர்களது ஆள்புல மரபு வழித் தாயகத்தில் கணிசமான அளவு சுயாட்சிக்கு வகை செய்திருந்தது.

ஆனால் தெற்கின் இனவாதம் மேலோங்கி நின்று பண்டா — செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறியச் செய்துவிட்டது. அதன் விளைவே இன்றைய போர் நிலைமை.

தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்கி அவர்களுக்கு ஓரளவு சுயாட்சி உரிமையைக் கொடுக்க, தனது அதிகாரப் பரவல் பொதி வகை செய்யும் என்று தற்போதைய அரசாங்கம் கூறுகிறது.

ஆனால் அது பற்றிய தீர்க்கமான முடிவு இன்னும் உத்தியோக பூர்வமாக எடுக்கப்படவில்லை; அறிவிக்கப்படவில்லை. எனினும் தமிழர்களின் ஆள்புல மரபுவழித் தாயகத்தை உடைத்துக் குறுக்கி — வெட்டி ஒட்டும் வேலை பார்த்து — எல்லை மாற்றஞ் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கசியத்தொடங்கியுள்ளன.

இத்தகைய ஒரு காலகட்டத்தில் தந்தை செல்வாவின் நூறாவது ஆண்டும் வருகிறது. அவரது அரசியல் சிந்தனைகளுக்கும், இலட்சியங்களுக்கும் மதிப்பளித்து தங்கள் உரிமைகளைப் பெறுவதில் மிக்க விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டியது தமிழர்களின் தலையாய கடமையாகும். அதுவே தீர்க்க தரிசனம் மிக்க அந்தப் பெருந்தலைவனுக்கு அவர்கள் செலுத்தும் நன்றியும், அஞ்சலியுமாக அமையும்.

# வீரவில புனர்வாழ்வு முகாமிலிருந்து 88 பேர் விரைவில் விடுதலையாவர்

யாழ்ப்பாணம்,மார்ச் 31

யாழ். மாவட்டத்தில் கைதான பின்னர் காணாமற் போனதாகக் கருதப்பட்ட 10 பேர் வீரவில புனர்வாழ்வு முகாமில் இருப்பது தற்போது தெரியவந்துள்ளது.

பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதாகி வீரவில புனர்வாழ்வு முகாமில் வைக்கப்பட்டுள்ள 87 ஆண்கள் பற்றிய தகவலையும்—

ஹங்கொடவில பெண்கள் புனர்வாழ்வு முகாமில் உள்ள சின்னத்தம்பி ஜெயந்தினி என்ற பெண் குறித்த தகவலையும்—

அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

இவர்களில் 62 பேர் எதிர் வரும் 3 ஆம் திகதி விடுதலை செய்யப்பட இருப்பதாகவும்—

ஏனையோர் புது வருடத்துக்கு முன்னர் படிப்படியாக விடுதலை செய்யப்படவிருப்பதாகவும்—

புனர்வாழ்வு நிலையப் பொறுப்பாளர் கப்டன் எஸ். கே. டி. கருணாபதி தெரிவித்தார்.

திருகோணமலை பொலீஸ் நிலைய பொலீஸார் வீரவிலவுக்கு அழைக்கப்பட்டு அங்கு வைத்து பொலீஸாரிடம் இவர்கள் ஒப்படைக்கப்படுவர் என்றும்—

பின்னர் அவர்கள் திருகோணமலையில் இருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு அவரவர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படுவர் என்றும்—

கப்டன் கருணாபதிமேலும் தெரிவித்தார்.

இவர்களை விடுவிப்பது தொடர்பான நிகழ்ச்சி ஒன்றும் வீரவிலவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இளைஞர் விவகார அமைச்சர் எஸ். பி. திஸநாயக்க இந்த நிகழ்வில் பங்குகொள்வார்.

ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் மற்றும்நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்வர்.

விடுதலை"பாவோருக்கு தேவையான அத்தியாவசியப் பொருள்களை வழங்குவதுடன், அவர்களுக்கு தேவையான போக்குவரத்து வசதிகளை டக்ளஸ் தேவானந்தா செய்து கொடுப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

விடுதலையாகும் 62 பேரில் 24 பேர் திருமணமானவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

வீரவிலவில் உள்ள 87பேரில் புதிதாகத் தற்போது தகவல் கிடைத்த 10 பேரின் விவரம் வருமாறு:-

பா. சற்குணராசா, பா.அருந்தவராஜா,மா.தயாபரன், சி. கனகலிங்கம், சு. நற்குணதேவன், சி. சசிகரன், வி. சத்தியதாசன், சி. சுகுமார், தா. தவேந்திரன், பூ. குணசேகரன்.

ஏற்கனவே விவரம் கிடைக்கப்பட்ட — ஏனைய — 77 பேரின் விவரம் வருமாறு;-

க. சுந்தரராசா, கி.விஸ்னுதாஸ், சி. சதிஸ்குமார், ஜெ. சத்தியானந்தன், செ. பாஸ்கரன், ம. நியூட் ஜீவகுமார், இ. ரெட்ணராஜா அ. அமலராஜ், க. அருளானந்தம், அ. ஜீவதாசன், வே. ஜெகதீஸ்வரன், பொ. தவராசா, ப. ஜெகன், இ. இலட்சுமணன், யே.வாட்சன், போ. ஜெயரட்ணம், ப. செல்வமனோகரன், தி. ரதிசீலன், இ. பரமதாஸ், த. குணசீலன், கி. குமாரவேலு, பா சிவசோதிநாதன், க. நனேந்திரன், மு. சசிகுமார், ஜே. கண்ணதாசன், இ. ஜெயதாஸ், ம. சிறிரங்கன், ஜே. கேதீஸ்வரன், கு. கெவின்குமார், மா. உதயகுமார், நா. ஆனந்தமோகன், இ. கண்ணன், கி. உதயராஜ், ச. செல்வம், இ. பஞ்சலிங்கம், க. சிவசக்திவேல், பெ. முனியாண்டி, எ. தேவதாஸ்.

கி. சசிகுமார், வி. யோகேஸ்வரன், கா. குமாரதாசன், வி: மதிபாலன், ஆ. பாலகிருஸ்ணன், சி. சத்தியசீலன், அ. கபீந்திரன், க. செல்வம், செ. நியாகரன், க. மோகனதாஸ், மா. ரகுநாதன், வே. ஆனந்தபவான், கி. ராஜேஸ்வரன், இ. முத்துக்குமாரலிங்கம், க. கமலநாதன், இ. விசிதரன், பூ. பாஸ்கரன், சி. சிவரூபன், செ. செந்தூரன், சி. ரவிச்சந்திரன், த. தயிதரன், தெ. ஜெயராசா, ஆ. செல்வரூபன், சி. சதிகுமார், அ. சுகந்தன், சி. சசிகரன், வை. தனபாலசிங்கம், க. சுதாகரன், கி. மவிர்தலிங்கம், சி. கனநாதன், வி. சிறிதரன், கி. பெர்னாண்டோ, கு. குகநேசன், ப. ரவீந்திரன், அ. கிருபாரூபன், மு. ரவிச்சந்திரன், சி. இமையகாந்தன், நா. தனராஜலிங்கம், செ. பாஸ்கரன்.

## தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட்டது

கொழும்பு, மார்ச் 31

அரசாங்க மருத்துவ அதிகாரிகள்சங்கம் தனதுதொழிற்சங்க நடவடிக்கையைக் கைவிட்டுள்ளது.

அரசாங்க மருத்துவ அதிகாரிகளின் சம்பள முரண்பாடுகளைக் கண்டறிந்து நீக்கும்நோக்கில் அமைக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவினால் அண்மையில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட அறிக்கையில் அடங்கியுள்ள சிபார்சுகள் குறித்து தாம் திருப்தியடைந்துள்ளதால் சம்பள முரண்பாடுகள் நீக்கப்படவேண்டும் என்பதற்கான தொழிற்சங்க நடவடிக்கை எதையும் மேற்கொள்ள வேண்டிய தேவை உருவாகவில்லை என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

(இ-10)

# வலயம் - 1 பாடசாலைகளின் உடற்பயிற்சி போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ். கல்வித்திணைக்கள வலயம் 1 பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகும்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா சுந்தரலிங்கம் தலைமை வகிப்பார்.

பிரதம விருந்தினராக யாழ். வலயம் 1 கல்விப்பணிப்பாளர் சு. இரத்தினராசா கலந்து கொள்ளுவார்.

அவரது பாரியார் திருமதி யோகேஸ்வரி இரத்தினராசா பரிசில்களை வழங்குவார்.

15 வயது ஆண்கள் பிரிவில் சென் ஜேம்ஸ் ம. வி., சென் சாள்ஸ் ம. வி., பெரியபுலம் ம. வி., கனகரத்தினம் ம. மகா வித்., கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி., வரணி ம. வி., வேலணை கிழக்கு ம.வி., கலாநிதி ஆ, தியாகராஜா ம. ம. வி. ஆகியவையும் —

15 வயது பெண்கள் பிரிவில் யாழ். கன்னியர்மட ம. வி., கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம், பெரியபுலம் ம. வி., கனகரத்தினம் ம. மகா வித்., சாவகச்சேரி மகளிர் கல்லூரி, அல்லாரை அ. த. க. பா., வேலணை சைவப்பிரகாச வித்., கரம்பன் சிறியபுஸ்ப மகளிர் ம. வி. ஆகியவையும்—

19 வயது ஆண்கள் பிரிவில் சென் சாள்ஸ் ம. வி., வைத்தீஸ்வராக் கல்லூரி, பெரியபுலம் ம.வி.,யாழ். இந்துக் கல்லூரி, டிறிபேக் கல்லூரி, கொடிகாமம் அ. த. க. பா., நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஷ்ட ம வி., காரைநகர் யாழ்ரன் கல்லூரி ஆகியவையும் —

19 வயது பெண்கள் பிரிவில், யாழ். கன்னியர்மடம் ம.வி., வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, பெரியபுலம் ம. வி., யாழ். இந்து மகளிர் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, டிறிபேக் கல்லூரி, வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி ம. ம. வி., கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் ம. வி. ஆகியவையும் பங்கு கொள்கின்றன.

பத்து வருட காலத்தின் பின்னர் தீவகப்பகுதியிலிருந்து பாடசாலை அணி உடற்பயிற்சிப் போட்டிகளில் பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கது.

இந்தநிகழ்ச்சியின் பரிசளிப்பு விழாவின் போது இவ் வருடம் வலயம் ஒன்று கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முதன்மை இடம்பெற்ற அணிகளின் வீரர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும்.

(இ-உ-51-111-117)

### கரப்பந்தாட்ட முடிவுகள்

யாழ். மாவட்டம் வலயம் i பாடசாலைகளுக்கு இடையே அண்மையில் நடைபெற்ற கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் 19 வயதுப் பிரிவில் மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதயாக் கல்லூரி முதலிடத்தையும், சாவகச்சேரி இந்துக்கல்லூரி இரண்டாம் இடத்தையும் பெற்றன. 17 வயதுப் பிரிவில் முதலாம் இடத்தை அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையும், இரண்டாம் இடத்தை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயமும் பெற்றன.

(உ)

# பேச்சுக்கு புலிகளை கொண்டு வரவேண்டும்

## அனுரா கூறுகின்றார்

''விடுதலைப் புலிகளை பேச்சுக்குக் கொண்டுவர வேண்டும், இல்லையேல் அதிகாரப்பரவலாக்கல் அர்த்தமற்றதாகிவிடும். இது எனது தனிப்பட்ட அபிப்பிராயம்.''

— இப்படிக் கூறியுள்ளார் ஐ. தே. கவின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுராபண்டாரநாயக்கா.

கொழும்பில் இருந்து வெளிவரும் 'த ஐலண்ட்' பத்திரிகையின் ஞாயிறு பதிப்புக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

அதிகாரப்பரவலாக்கலுக்கு புலிகள் ஆதரவு கிடைக்காதுவிட்டால் அந்த அதிகாரப் பரவலாக்கல் வெறும் ஏட்டில் தான் இருக்கும்.

அதிகாரப்பரவலாக்கல் நகலை புலிகள் இப்போது உள்ள நிலையில் ஏற்கவேண்டும்; அல்லது திருத்தங்கள் செய்து அதை ஏற்கவேண்டும். அப்படியானால்மட்டுமே ஐ. தே. க. அதனை ஆதரிக்கும்.

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பீரிஸ் வெளியிட்டுள்ள 18 அம்ச அதிகாரப் பரவலாக்கலை நாம் ஆராய்கிறோம். ஆனால் மோசடி மூலம் ஐ. தே. கவை தேர்தலில் வென்ற பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இனியும் ஐ.தே.க. ஒத்துழைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஐ. தே. க. தற்சமயம் நல்ல மன நிலையில் இல்லை. எக்காரணம் கொண்டும் ஒற்றையாட்சியை மாற்ற ஐ. தே. க. ஆதரவு வழங்கப்போவதில்லை — இவ்வாறு அவர் மேலும் கூறினார்.(உ-3-150

# தலைவர்கள் பலரை ஐ. தே. க. ஓரங்கட்டும்

கொழும்பு, மார்ச் 31

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் பல தலைவர்களை ஓரங்கட்டுவதற்கு ஐ. தே. கட்சி முடிவு செய்திருக்கின்றது.

விஜேபால மெண்டிஸ், ஏ.எம். ஆர். அதிகாரி, எம். எச். எம். மொகமட், றொனி டி மெல், காமினி ஜெயவிக்கிரம பெரேரா, காமினி [illegible], பெஸ்டஸ் பெரேரா போன்றவர்களே கட்சியிலிருந்து ஓரங்கட்டப்படவிருப்பதாக ஐ. தே. க. பிரமுகர் அனுரா பண்டரநாயக்கா தெரிவித்தார்.

(உ-3-150)

## நாளை

பங்குனி 19
செவ்வாய்க்கிழமை
திதி: அட்டமி
காலை 8.47 வரை.
நட்சத்திரம்: பூராட்டம்
பிற்பகல் 1.51 வரை
சுபநேரம்: 10.41-12.11
ராகுகாலம்: 3.11-4.41
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதி அருள்மிகு அரசடி விநாயகர் ஆலய பஞ்சமுக விநாயகர் கும்பாபிஷேக தின மணவாளக் கோல விழா இன்று காலை 9 மணிக்கு விசேட ஸ்நபனா அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். பிற்பகல் 2 மணிக்கு பஞ்சமுக அர்ச்சனையும் 3 மணிக்கு விநாயகர் வீதியுலாவும் இடம்பெறும். சிறப்பு நிகழ்ச்சியாக பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் ''சமய வாழ்வு'' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌடா தலைமையிலான ...

(முதலாம் பக்கத் தொடர்) உரிமையை தமது கட்சிக்கு வழங்கும் படியும் அவர் தமது கடிதத்தில் கோரினார்.

நாட்டில் சட்டம், ஒழுங்கு நிலைமை சீர்குலைந்து விட்டது என்றும் —

காங்கிரஸ் கட்சிக்கு உரிய முக்கியத்துவம் அளிக்க தேவகௌடா அரசு தவறி விட்டது என்றும் —

பாரதீய ஜனதாக் கட்சி போன்ற மதவாதக் கட்சிகள் மற்றும் இனவாத அமைப்புக்களின் செயற்பாட்டைத் தடுக்க இந்த அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றும் —

சீதாராம் கேசரி தமது கடிதத்தில் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

காங்கிரஸ் கட்சித் தலைவரின் இந்தத் திடீர் முடிவு குறித்துக் காங்கிரஸின் மூத்த தலைவர்கள் ஆச்சரியம் தெரிவித்தனர். சரத்பவார், ராஜேஷ் பைலட், ஜகன்னத் மிஷ்ரா, சுரேஸ் கல்மாதி போன்ற தலைவர்கள் இது அவசரப்பட்டு எடுக்கப்பட்ட முடிவு என்ற சாரப்பட கருத்துத் தெரிவித்தனர்.

கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் அனுமதியின்றி இந்தமுடிவை சீதாராம்கேசரி எடுத்திருப்பதாக காங்கிரஸ் வட்டாரங்கள் அதிருப்தி தெரிவித்தன.

543 உறுப்பினர்களைக் கொண்ட இந்திய நாடாளுமன்றத்துக்கு கடந்த ஏப்ரலில் தேர்தல் நடைபெற்றது. எனினும் எந்தக் கூட்டணியும் பெரும்பான்மை பலத்தைப் பெறவில்லை.

162 உறுப்பினர்களைக் கொண்டிருந்த பாரதீய ஜனதாக் கட்சி சிறுபான்மை அரசு ஒன்றை அமைத்த போதிலும், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையினரின் ஆதரவை நிரூபிக்க முடியாத நிலையில் — 2 வார காலத்துக்குள் இராஜினாமாச் செய்தது.

அதன் பின்னர் 13 கட்சிகளின் கூட்டமைப்பான — ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்தது. அரசில் இடம்பெறாத மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் 32 உறுப்பினர்களுடன் சேர்ந்து அந்த முன்னணிக்கு நாடாளுமன்றத்தில் 188 உறுப்பினர்கள் உள்ளனர். பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதற்கு அந்த முன்னணிக்கு இன்னும் 84 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. 139 உறுப்பினர்களைக் கொண்ட காங்கிரஸ் கட்சி வெளியிலிருந்து ஆதரவு தர முன்வந்ததையடுத்து ஐக்கிய முன்னணி அரசு கடந்த ஜூன் முதலாம் திகதி பதவியேற்றது.

தமது ஆதரவை காங்கிரஸ் விலக்கிக் கொண்டாலும் 139 உறுப்பினர்களுடன் அக்கட்சியால் புதிய அரசு ஒன்றை அமைக்க முடியுமா என்பது கேள்விக் குறியே என அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

இதே போன்று 1979 இல் சரண்சிங் தலைமையிலும், 1991 இல் சந்திரசேகர் தலைமையிலும் சிறுபான்மை அரசுகள் அமைவதற்கு வெளியிலிருந்து ஆதரவு வழங்கிய காங்கிரஸ், குறுகிய காலத்துக்குள் தமது ஆதரவை வாபஸ் பெற்று அந்த ஆட்சிகளைக் கவிழ்த்தது குறிப்பிடத்தக்கது.

(உ-3-5)

## ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் பக்தர்களே! எங்கள் கோயிலில் திருப்பணி வேலைகள் சென்றமாதம் ஆரம்பமாகியுள்ளதை நீங்கள் யாவரும் அறிவீர்கள். கோயில் நிர்வாகம் அல்லது தர்மகர்த்தாக்கள் எவரையும் எங்கள் கோயில் திருப்பணிகள் அல்லது எது சார்பாகவும் பணம் அல்லது பொருள்கள் எங்கும் சேகரிக்க அனுமதி வழங்கவில்லை என்பதனைத் தாழ்மையுடன் அறியத்தருகின்றோம்.

மேலும் திருப்பணி வேலைகட்குப் பணம் அல்லது பொருள் நன்கொடை கொடுக்க விரும்பியவர்கள் கோயிலில் உள்ள அலுவலகத்தில் அவற்றைக் கொடுத்து அதற்குரிய பற்றுச்சீட்டையும் பெற்றுக் கொள்ளுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

செயலர்,
தர்மகர்த்தா சபை.

(46041)

## மாணவருக்காக விலை குறைப்பு

★ கறுப்பு, வெள்ளை சப்பாத்துக்கள்
கொழும்பு விலையுடன் மேலதிகமாக 20 ரூபா மட்டும் கூடுதலாக சேர்க்கப்படும்.

★ சொக்ஸ் வகைகள்
கொழும்பு சில்லறை விலைக்கே (45/- — 58/-) உண்டு.

★ ஸ்கூல் பாக் ரூபா 75/- — 300/- வரையும்

★ பெல்ட் ரூபா 25/- — 100/- இலும் மற்றும் பாட்டா, றன்பா, DSI பாதணிகள் நியாய விலையில் நீங்கள் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்:

### வண்ணக்காலணிப் பூங்கா

பலாலி வீதி, திருநெல்வேலி. (பரமேஸ்வராச் சந்தி)
கிளை: கண்டி றோட், சாவகச்சேரி.

(46058)

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை நாகம்மா

காரைநகர் விளானைப் பிறப்பிடமாகவும், காரைநகர் பயிரிக்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நாகம்மா 29-3-97 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை காசுபதி தம்பதிகளின் அன்பு மகளும, காலஞ்சென்ற முருகேசு சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், கணபதிப்பிள்ளையின் அன்புமனைவியும், அன்னமலர், குலேந்திரன், கனகேந்திரன், இந்திராதேவி, கனகசுந்தரம் ஆகியோரின் அன்புத்தாயாரும், வேலுப்பிள்ளை (சுந்தரலிங்கம்), இராஜேஸ்வரன, யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், வேணுகன், சுகந்தினி சரணிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30-03-97) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
கனகசுந்தரம்.
(மகன்)

தற்போதைய முகவரி:
பலாலி றோட்,
மடம் லேன்,
திருநெல்வேலி.

(46067)

### செல்லத்துரை முருகவேள்

கொக்குவில் தலையாளியைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடம் மணல்தறை ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகவேள் (நல்லூர் பிரதேசசபை ஊழியர்) 30-03-97 இல் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை- பாக்கியலக்ஷ்மி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், குணநாயகியின் அன்புக் கணவருமாவார்.

இறுதிக்கிரியைகள் 30-03-97 அன்று நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

குணநாயகி.
(மனைவி)

28/4, மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம்.

(46076)

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்) றுள்ள அரசியல் நெருக்கடி குறித்து ஆராய்ந்து முடிவெடுப்பதற்காக ஐக்கிய முன்னணியின் வழிகாட்டுக்குழுக் கூட்டம் இன்று நடைபெறவிருக்கின்றது. இக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக முன்னணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் தலைவர்கள் நேற்று புதுடில்லி நோக்கி விரைந்து கொண்டிருந்தனர்.

பதின்மூன்று கட்சிகளின் ஐக்கிய முன்னணி கூட்டமைப்பு உருவாவதற்கு கடுமையாக உழைத்த முன்னாள் பிரதமர் வி. பி. சிங் ஆஸ்பத்திரியில் இருந்தவாறு தற்போதைய அரசியல் நெருக்கடி குறித்து கருத்து வெளியிட்டார்.

ஐக்கியமுன்னணியில் இடம் பெற்றுள்ள கட்சிகள் தமது ஐக்கியத்தை மேலும் இறுக்க [illegible] இந்த நெருக்கடி நிலையை எதிர் கொண்டு முறியடிப்பா என்றார் அவர். (உ- 3)

# ஜனாதிபதியை கொல்லச் சதி!

## கொழும்பில் தமிழர் கைது

கொழும்பு, மார்ச் 31

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைகொலைசெய்யத்திட்டம் தீட்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் விடுதலைப்புலிகளின் தற்கொலைப்படை உறுப்பினர் ஒருவரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இத்தகவலை ''சண்டே ஒப்சேவர்'' தெரிவித்தது.

26 வயதுடைய ரகு அப்பா என்ற அந்தோனிப்பிள்ளை நேசராசா என்பவர் கொழும்பில் உள்ள ஜனாதிபதியின் இல்லத்தை அருகில் உள்ள அடுக்குமாடிக் கட்டடத்தில் இருந்து வீடியோ படம் எடுத்ததாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்க உயர் அதிகாரிகள் செல்லும் ஹெலிக்கொப்டர்களை தாக்குவதும் அவரது திட்டம் என்றும் கூறப்பட்டது.

அந்தப்பத்திரிகை தகவல் குறித்து தமக்கு எதுவும் தெரியாது என்று இராணுவப் பேச்சாளர்தெரிவித்தார்.

(உ-3)

## கல்வி அபிவிருத்தித் திட்டம் வடமராட்சி கிழக்கில் ஆரம்பம்

பருத்தித்துறை, மார்ச் 31

வடமராட்சிகிழக்கு கஷ்டப் பிரதேசப் பாடசாலை மாணவர்களின் மொழியறிவு தொடர்பான மூன்றாண்டுக் கல்வி அபிவிருத்தித் திட்டம் யாழ். வலயம் 2 இன் பிரதிக் கல்விப் பணிப்பாளரும், முன்னாள் ஆசிரிய கலாசாலை அதிபருமான திருமதி எஸ். இராமநாதன் தலைமையில் நாகர்கோயில் அ. மி. த. க. பாடசாலையில் கடந்த வியாழனன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

வடமராட்சி கிழக்கிலுள்ள 19 பாடசாலைகளின் ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 3வரை கற்பிக்கும் சகல ஆசிரியர்களும் இவ்வைபவத்தில்கலந்து கொண்டனர்.

மாணவர்களின் பேச்சு, எழுத்து, வாசிப்பு ஆகியவற்றின் மொழிபறிவு விருத்தி செய்வது தொடர்பாக மூன்றாண்டு கற்றல் கற்பித்தல் திட்டமிடப்பட்டுள்ளது. விரைவில் மாணவர்களின் கணித எண்ணக்கரு தொடர்பான செயற்திட்டமும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

(ஐ-118)

## தொடர்ந்து...

(முதலாம் பக்கத் தொடர்) என்று கூறினார்.

சமீபத்திய தேர்தல் முடிவுகள்பற்றி ஆராய்வதற்காக இ. தொ. காவின் நிறைவேற்றுக் குழு நேற்றுக் கூடியது. கட்சியை மறுசீரமைப்பதற்கு சகல அதிகாரங்களையும் தொண்டமானுக்கு வழங்குவது என இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

(உ-5)

## ஓகஸ்ட்...

(முதலாம் பக்கத் தொடர்) அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தின் கீழ் பிராந்திய ஒன்றியம் அமைக்கும் யோசனைக்கு ஐ. தே. கவும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இதனால் அரசின் தீர்வுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு வாக்குகளைப் பெற முடியாத நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நெருக்கடி நிலையைச் சமாளிப்பதற்கும் —

மககள் ஆதரவு பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கு தொடர்ந்து உள்ளது என்பது கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் நிரூபிக்கப்பட்டிருப்பதால் அந்த வாய்ப்பைஉரிய முறையில் பயன்படுத்தவும் —

திடீர் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவதே உசிதமானது என அரச உயர்பீடம் கருதுவதாகத் தெரிகின்றது.

உத்தேச திடீர் பொதுத் தேர்தலுக்கு முன்பாக தேர்தல் சட்டத்தை மாற்றவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

விகிதாசார முறைப்படி ஐம்பது வீதமான உறுப்பினர்களையும் —

தொகுதி அடிப்படையில் எஞ்சிய 50 வீதமான உறுப்பினர்களையும்

தெரிவு செய்யும் வகையில் தேர்தல் சட்டம் திருத்தப்படவிருக்கிறது.

இத்தகைய திருத்தத்தின் மூலம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்கள் பெறுவதை உறுதிப்படுத்த முடியும் என அரசுத் தரப்பு கருதுகின்றது. அதன் மூலம் அரசியல் தீர்வுப் பொதியை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும் என்றும் அரசு நம்புகிறதாம்.

(உ-3-150)

## 9 அதிவேகப்...

(முதலாம் பக்கத் தொடர்) கும்பணியே மிக அவசரமாக மேற்கொள்ளப்படுகின்றது.

கடற்படைக்கு போதிய துருப்புக்களும் கடற்கலங்களும் இல்லை. இதனால் நாட்டின் முழுக் கடற்பரப்பிலும் ஒரேசமயத்தில் முற்றாகபாதுகாப்பை வழங்க முடியாதுள்ளது. மூன்றில் ஒரு பகுதி கடற்பரப்புக்கே பாதுகாப்பு வழங்க முடிகிறது —

இவ்வாறு கடற்படையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். (உ-3-150)

## அன்ரனோவ்...

(முதலாம் பக்கத் தொடர்) தப்பியது.

கொழும்புத் தகவல்கள் இச்செய்தியை வெளியிட்டன.

40 பயணிகளுடன் இந்த விமானம் வெள்ளி இரவு இரத்மலானை விமான நிலையத்தில் தரையிறங்கிய சமயம் அதன் ஒரு ரயர் திடீரென காற்றுப்போய் விட்டது.

இதனால் ஓடுபாதையில் விமானம் ஓட முயன்ற சமயம் அது ஒரு பக்கத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டது.

விமானியின் சாதுரியத்தால் பாரிய அனர்த்தம் ஏற்படாமல் சேதம் எதுவும் இன்றி விமானம் தப்பிக் கொண்டது.

இந்த விபத்துத் தொடர்பாக விமானப்படை சனிக்கிழமை வரை எதுவித தகவலையும் வெளியிடவில்லை.

அந்த விமானத்தில் யார் பயணம் செய்தார்கள்? சிரேஷ்ட அதிகாரிகள் அந்த விமானத்தில் இருந்தார்களா? என்பவை குறித்து தகவல் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

அரசு கொள்வனவு செய்த அன்ரனோவ் விமானங்கள் நான்கில் ஒன்று 1995 செப்ரெம்பர் 13ஆந்திகதியும், மற்றொன்று 1995 நவம்பர் 22 ஆந் திகதியும் கடலில் வீழ்ந்து மூழ்கியதும் —

மூன்றாவது விமானம் கடந்த பெப்ரவரி 21 ஆம் திகதி இரத்மலானை விமான நிலையப் பகுதியில் ஓடி எழும்ப முயன்ற சமயம் வீழ்ந்து நொறுங்கியதும் தெரிந்தவையே.

(உ-3-150)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31 - 03 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org